பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 25 புதன்கிழமை (10.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:014

# இன அழிப்பு 'சிவப்பு எச்சரிக்கை' நாடுகள் பட்டியலில் இலங்கை!

## ஆபத்தை வெளிப்படுத்துகிறது அமெரிக்கச் செயலணி

நியூயோர்க், டிசெம்பர் 10

உலகில் இன அழிப்புப் பேராபத்து நிலவும் 8 நாடுகளில் இலங்கையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் நியூயோர்க்கைத் தளமாக கொண்டு இயங்கும் 'இனப்படுகொலை தடுப்புத் திட்டம்' என்ற செயலணிக்குழுவே, இலங்கையையும் இனப்படுகொலை - இன அழிப்புக் கொடூரம்-நிகழும் நாடுகள் வரிசையில், 'சிவப்பு எச்சரிக்கை' நாடுகள் பட்டியலில் சேர்த்திருக்கின்றது.

அமெரிக்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மடலின் அல்பிரைட் மற்றும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் எஸ். கோஹென் ஆகியோரின் தலைமையிலான குழுவொன்றினால் வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பதவியை துறந்தார் கருஜயசூரிய

கொழும்பு, டிசெ.10

அரசில் அமைச்சுப் பதவியில் அங்கம் வகித்த கருஜயசூரிய நேற்று தனது அமைச்சுப் பதவியைத் துறந்தார்.

தனக்கு வழங் கப்பட்டுள்ள ஐ.தே.கவின் உபதலைவர் பதவியையும் தான் ஏற்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

அதேவேளை, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஐ.தே.கவின் ஜனநாயகப் பிரிவில் ஏனைய அமைச்சர்கள் நேற்று ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினர்.

(மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்)

## விசாரணை முடியும் வரை இலங்கைக்கு ஜி.பி.எஸ்+

பிரசெல்ஸ், டிசெ. 10

வளர்முக நாடுகளுக்கு, ஐரோப்பிய ஒன்றியம் ஏற்றுமதி வரிச் சலுகையாக வழங்கும் ஜி.எஸ்.பி+ முன்னுரிமை வரி அடுத்த 3வருடங்களுக்கு (2009-2011 வரை) மொத்தம் 16 நாடுகளுக்கு வழங்கப்படவுள்ளது இந்த நாடுகளின் பட்டியல் நேற்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தெரிவான 16நாடுகளில் இலங்கை மற்றும் எல்-சல்வடோர் ஆகிய இரண்டிதும் தகுதி குறித்து ஐரோப்பிய ஒன்றியம் இப்போது விசாரணைகளை மேற்கொண்டு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவின் கருத்துக் குறித்து

# இந்திய அரசு கடும் கண்டனம்; இலங்கை வருத்தம் தெரிவிப்பு

சென்னை, டிசெ.10

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வரும் தமிழக அரசியல் கட்சித் தலைவர்களை 'கோமாளிகள்' என்று இழிவாகப் பேசிய இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் ஆணவப் பேச்சுக்கு இந்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்ததையடுத்து, இலங்கை அரசு வருத்தம் தெரிவித்துள்ளது. இனிமேல் இது போன்ற கருத்துகள் கூறப்படுவது தவிர்க்கப்படும் என்றும் அது உறுதியளித்துள்ளது.

- இவ்வாறு டில்லியிலுள்ள வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் விஷ்ணு பிரகாஷ் நேற்றுக் கூறினார்.

இதுகுறித்து மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தமிழர் தேசிய இயக்கத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் மாணவர் விடுதி மீது படையினர் நேற்று ஷெல் தாக்குதல்

கொழும்பு, டிசெ.10

முல்லைத்தீவில் உள்ள மாணவர் விடுதி ஒன்றின் மீது படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் அந்த விடுதி சேதமடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து இணையத்தளத்தில் வெளியான தகவல்கள் வருமாறு:-

மணலாறில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை தொடக்கம் மாலை வரை முல்லைத்தீவு, முள்ளியவளை மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து தொடரான ஷெல் தாக்குதலை நடத்தினர்.

முல்லைத்தீவு பங்குத்தந்தையின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் மாணவர் விடுதியே படையினரின் ஷெல் தாக்குதலில் சேதமடைந்துள்ளது.

இதேவேளை, முள்ளியவளையின் மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத் தும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் பேட்டியை வெளியிட்ட 'சண்டே ஒப்சேவ'ரின் ஆசிரியர் பதவி நீக்கம்

கொழும்பு, டிசெ. 10

தமிழக அரசியல் தலைவர்களை "அரசியல் கோமாளிகள்" என்று இராணுவத் தளபதி கூறியதை பிரசுரித்த அரச சார்புப் பத்திரிகையான 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகையின் ஆசிரியர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கூற்றுக் குறித்து, இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் கடும் கண்டனம் தெரிவித்ததைத் தொடர்ந்து பத்திரிகை ஆசிரியர் பதவி நீக்கப்பட்டார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விவகாரம் தொடர்பாகத் தாம் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக இந்தியத் தூதரிடம் கோத்தபாய கூறியிருந்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கோத்தபாய நேற்று உயர் அதிகாரிகளுடன் யாழ். வந்து களநிலைமைகளை ஆராய்ந்தார்

யாழ்ப்பாணம், டிசெ.10

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உயர் மட்டக் குழு ஒன்றுடன் பலாலிக்கு நேற்று வருகை தந்து கள நிலைவரம் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

கூட்டுப்படைகளின் தளகர்த்தர் டொனால்ட பெரேரா, இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா உட்பட உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுடன் நேற்றுக் காலை 9மணிக்கு பலாலிக்கு அவர் விஜயம் மேற்கொண்டார்.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி செயலாளர் மற்றும் தளபதிகளை பலாலி விமான நிலையத்தில் வரவேற்றார்,

யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் படை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. உலக உணவுத் திட்டத்தின் நிவாரண லொறிகள் வன்னிக்கு!

கொழும்பு, டிசெ. 10

வன்னிப்பகுதிக்கு 50 லொறிகளில் உலக உணவுத் திட்டத்தின் நிவாரண உணவுப் பொருள்கள் உட்பட 64 லொறிகளில் உணவுப் பொருள்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக வன்னிப் பகுதிக்குச் செல்லமுடியாமல் வவுனியாவில் தங்கியிருந்த அரச அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு வன்னிப்பகுதிக்குச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது எனவும்தெரிவிக்கப்பட்டது.

இந்த வாகனத் தொடரணியுடன் பயணித்த ஐ நா. அதிகாரி ஒருவர் பி. பி. ஸிக்கு தெரிவித்தவை வருமாறு:-

ஓமந்தையில் இருந்த சோதனைச் சாவடி

(16 ஆம் பக்கம் பார்க்க)

நுளம்புகளிலிருந்து உங்களைப் பாதுகாக்க

- நுளம்புகள் உற்பத்தியாகும் நீர் தேங்கி நிற்குமிடங்களை அழியுங்கள்.
- நுளம்பு வலைகளைப் பாவியுங்கள் - மருந்தூட்டப்பட்ட நுளம்பு வலைகளைப் பாவிப்பது சிறந்தது.
- நுளம்புகளை விரட்ட நுளம்புத் திரிகளை அல்லது மின்சாரம் மூலம் இயங்கும் நுளம்பு விரட்டிகளைப் பாவியுங்கள்.
- நுளம்புகள் அதிகமாயுள்ள வேளைகளில் நுளம்புகளை விரட்ட வேப்பிலை போன்றவற்றால் புகையூட்டலாம்.
- பகலில் நுளம்புகள் உள்ள இடங்களில் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாக்க கை, கால்களை மூடக்கூடிய நீளமான ஆடைகளை அணியுங்கள்.
- நுளம்புகளின் குடம்பிகளையுண்ணும் திலாப்பியா, யப்பான் போன்ற மீனினங்களை கிணறுகள், நீர்நிலைகளில் வளர்க்கலாம்.
- நுளம்புகளை விரட்டும் மணம் கொண்ட சித்திரனெல்லா எண்ணை, சித்தாலேப போன்றவற்றை உடலில் பூசலாம்.

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

care

அனுசரணை: Care International

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கரு மீதான ஒழுங்கு நடவடிக்கையை இடைநிறுத்தியது ஐ.தே.க. செயற்குழு

கொழும்பு, டிசெ. 10

கரு ஜயசூரிய ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு எதிராகக் கட்சி எடுக்கவிருந்த ஒழுக்காற்று நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஐ.தே.கட்சி நேற்றுத்தெரிவித்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் எம்.பி. சாகல ரட்ணாயக்கவே இதைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அண்மையில் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் கருஜயசூரியவிற்கு மிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின் பலாபலன்களை ரணில் விக்கிரமசிங்க எமது கட்சியின் செயற்குழுவிற்குத் தெரிவித்தார். இதைத் தொடர்ந்தே கரு ஜயசூரிய பிரதித்தலைவராக நியமிக்கப்பட்டார்.

அவர் கட்சியை விட்டு விலகி அரசுடன் இணைந்து கொண்டதன் காரணத்தால் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்றை எடுக்க கட்சி முடிவெடுத்திருந்தது. இப்போது அந்த முடிவு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் 'கோப்' குழுவில் அவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அக் குற்றச்சாட்டில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். இவ்வாறான நிலையில் அவர் மீண்டும் எமது கட்சியின் பிரதித் தலைவராவதில் எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை.

எமது கட்சியின் ஒருமித்த இணக்கப்பாட்டுடனேயே கரு ஜயசூரிய பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது - என்றார்.

(சி)

## மரண அறிவித்தல்

### சுப்பையா தட்சணாமூர்த்தி

(ஓய்வுபெற்ற ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி)



சுப்பையா தட்சணாமூர்த்தி(ஓய்வுபெற்ற ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி) 07.12.2008 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா- செல்லம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான ராமுப்பிள்ளை- சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் (தேவி) அன்புக் கணவரும் சுந்தரவடிவேல் (கனடா), சண்முகவடிவேல்(லண்டன்), சுகந்தினி(ஆசிரியை, நாரந்தனை றோ/க/வித்தியாலயம்), ஆனந்தவடிவேல் (பொறியியலாளர், லண்டன்), அருள்வடிவேல் (பொறியியலாளர், லண்டன்), அன்புவடிவேல், தங்கவடிவேல் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜானகி(கனடா), கவிதா (லண்டன்), மயூரதன்(ஆசிரியர், புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுஷா, மனோஜன், சாருகன், மிதுனன், அக்ஷயன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சொக்கநாதன், திவாகரமூர்த்தி, தில்லையம்பலம்(கனடா), இராசேந்திரம்(கனடா), இராஜசுகுந்தரி (கனடா), சௌபாக்கியலட்சுமி, பாலசுந்தரம்(ஒப்பந்தகாரர், நீர்கொழும்பு), ஸ்ரீ ராமச்சந்திரன்(உரிமையாளர், நாதன் அன் சகோதரர்), சிவசுப்பிரமணியம்(அமெரிக்கா), விக்னேஸ்வரன் (நோர்வே), சண்முகராஜா(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகம்மா, திலகவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2008) புதன் கிழமை பி.ப 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன்கோயிலடி,*
*குமாரலிங்கம் வீதி,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*

தகவல் :
குடும்பத்தினர்.


**வீடு, காணி விற்பனைக்குண்டு**

யாழ் நகரப் பகுதியை அண்டிய பிறவுண் வீதிக்கும், யாழ்.இந்துக் கல்லூரிக்கும் இடையில் நீராவியடியில் 1பரப்புக் காணியுடன் கூடிய கல்வீடு, நல்ல சூழலில் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 021 222 8737
077 5296644


**உயர் பதவி அமைந்த அதிபர் அவர்களை மனதார பாராட்டி ஆசிகூறி வாழ்த்துகின்றோம்**



யாழ்.மத்திய கல்லூரியில் பல வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்து இப்போது அக் கல்லூரியின் அதிபராக பதவியேற்றிருக்கும்

திருவாளர்

**இலட்சுமணன் ஓங்காரமூர்த்தி (SLPS -I)**

அவர்களின் பணி மென் மேலும் உயர எல்லாம் வல்ல கடையிற் சுவாமியின் குரு அருளும் ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் திண்ணை புரத்தான் திருவருளும் கிடைக்க எமது நல்லாசிகளைக் கூறி மாணவச் செல்வங்களும் கல்வியில் மென்மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

*இல:- 48, பிறவுண் வீதி,*
*நீராவியடி,*
*ஈழத்துச் சிதம்பரம்,*
*காரைநகர்.*

சிவஸ்ரீ- நாகேந்திர பாலா சுப்பிரமணிய சிவாச்சாரியர் குடும்பம்,
சிவஸ்ரீ நா.பா.ஸ்கந்தரூபக் குருக்கள் குடும்பம்,
சிவஸ்ரீ- நா.பா.ஸ்ரீஸ்கந்தராஜ சர்மா குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலி

*அளவெட்டி -மல்லாகம் ப.நோ.கூ. சங்க பணியாளர் திரு.மா.பகீதரன் அவர்களின் அன்புத் தந்தையார்*

**இளையதம்பி மார்க்கண்டு**



*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.*

அளவெட்டி -மல்லாகம்
ப.நோ.கூ.சங்க ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## மரண அறிவித்தல்

### லயன் தணிகாசலம் ஜெயநாதன்

(உரிமையாளர், கமக்காரர் மாளிகை - சுன்னாகம், இணுவில், உழவர் களஞ்சியம் - திருநெல்வேலி)

(Farmers Store)




05.12.2008 இல் காலமான இணுவில் கிழக்கைச் சேர்ந்த தணிகாசலம் ஜெயநாதனின் இறுதிக்கிரியைகள் இன்று(10.12.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

A.M. School Lane,
இணுவில் கிழக்கு,இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## கந்தையா இராசதுரை

(பிரபல மரக்கறி வியாபாரி, திருநெல்வேலிச் சந்தை)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி முருகன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசதுரை நேற்று (09.12.2008) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

முருகன் வீதி,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இனவழிப்புக் கொடூரம் இடம்பெறும் தேசங்களின் வரிசையில் இலங்கை

இன்று - டிசெம்பர் 10 ஆம் திகதி - சர்வதேச மனித உரிமைகள் தினம்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச்சபையால் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி மனித உரிமைகளுக்கான சர்வதேச பட்டயம் ஏற்று பிரகடனப் படுத்தப்பட்டது. அன்று முதல் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்த வரிசையில் இம்முறை இப்பிரகடனத்தின் அறுபதாவது ஆண்டுப் பூர்த்தியில் இத்தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

இப்பிரகடனத்தை ஏற்றுக்கொண்டுள்ள இலங்கை, பிரிட்டிஷ் சாம்ராச்சியப் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திரத் தீவாக மாறிய அறுபதாவது ஆண்டும் இந்த வருடமே அனுஷ்டிக்கப்பட்டது. இந்தப் பின்புலத்திலே நாம் வாழும் இந்த இலங்கைத் தீவில் மனித உரிமைகளின் நிலைமையை இன்றைய சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் ஒரு தடவை மீள் மதிப்பீடுசெய்வது பொருத்தமாகிறது.

பிரிட்டிஷ் பிடியிலிருந்து இலங்கைத் தீவு விடுபட்ட காலம் முதல் இங்கு தனது பிரதான - அடிப்படை - உரிமைகளை இழந்து, அடிமைப்பட்ட சமூகமாகத் துன்பியலில் உழலும் பேரவலம் சிறுபான்மையினமான தமிழினத்தின் கதியாக இருந்து வருவதுதான் வேதனைக்குரிய யதார்த்தமாகும்.

பிரிட்டனின் பிடியிலிருந்து அரசியல் அதிகாரம் பெரும்பான்மையினமான சிங்களவரிடம் கைமாறியமையை அடுத்து, சிங்களப் பேரினவாதமே இத்தேசத்தின் மேலாண்மைக் கருத்தாதிக்கமாக மாறியது. அன்று முதல் தமிழர்களுக்கு எதிரான இன அடக்குமுறை, குரூர வன்முறை மற்றும் பலாத்கார வடிவம் எடுத்தது.

தமிழரின் தேசிய வாழ்விற்கும் இனத்துவத்தின் தனித்துவத்துக்கும் அடிப்படை ஆதாரங்களாகவும், அத்தியாவசிய அடித்தளமாகவும் இருந்த அம்சங்களையும், கட்டமைப்புகளையும் படிப்படியாக இலக்கு வைத்துத் தகர்த்துவிடும் கொடூர வடிவமாக இந்த இன அடக்குமுறை இங்கு விரிவாக்கம் பெற்றமையே இந்த அறுபது ஆண்டுக்கால சுதந்திர(?) இலங்கையின் வரலாறாகக் கட்டவிழ்ந்துள்ளது.

இந்த இனவழிப்பு அடக்குமுறை காலத்துக்குக் காலம் பல வடிவங்களை எடுத்துத் தமிழர்களுக்கு எதிராகப் பாய்ந்தது.

ஆரம்பத்தில் தமிழரின் தனித்துவ இன அடையாளமான மொழி உரிமை முதலில் பறிக்கப்பட்டது. அதனை அடுத்து, கல்வி உரிமை பிடுங்கப்பட்டது. அதன்பின், வேலைவாய்ப்பு உரிமைக்கு ஆப்பு வைக்கப்பட்டது. தொடர்ந்து பாரம்பரிய நிலங்கள் மீதான சொத்துரிமைக்கு வேட்டு வைக்கப்பட்டது. அதே சமயம், தமிழ்ப் பேசும் மக்களின் வாக்குரிமை, பாரம்பரிய வாழ்விடங்களில் இனத்துவத்தைப் பேணும் தாயக உரிமை போன்றவற்றுக்கும் திட்ட மிட்டுக் கேடு விளைவிக்கப்பட்டது.

இப்படித் தமிழர்களின் அடிப்படை - பிரதான - உரிமைகளுக்கு கட்டப்பட்டு வந்த சமாதி, கடைசியில் இனப்படுகொலைக் கொடூரமாக இப்போது விஸ்வரூபம் எடுத்து, அவர்களின் வாழ்வியல் உரிமைகளுக்கே நிரந்தர சாவுமணி அடிக்கும் கட்டத்தை எட்டிவிட்டது.

பேயாட்டம் போடும் பேரினவாதத் திமிர், தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, கொடூரப் போர் மூலம் துவம்சம் செய்யும், இனவழிப்பின் உச்சத்தை எட்டியிருப்பதை இன்று உலகு வேதனையோடு பார்த்திடும் நிலைமை.

சர்வதேச மனித உரிமைகள் பட்டயத்தின் கீழ் இனப் படுகொலை அல்லது இன அழிப்பு சகித்துக்கொள்ள முடியாத விடயமாக அமைகின்றது.

இந்தப் பின்புலத்திலேயே இனவழிப்பு பேராபத்து நிலவும் 'சிவப்பு எச்சரிக்கை' நாடுகளின் வரிசையில் - முதல் எட்டு தேசங்களுள் - இலங்கைக்கும் இடம் அளித்திருக்கின்றது அமெரிக்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மடலின் அல்பிரைட் அம்மையார் தலைமையில் இவ்விடயங்களை ஆராய்ந்த அமெரிக்காவின் விசேட செயலணிக்குழு.

இந்தத் தேசங்களில் இனவழிப்பு அல்லது இனப் படுகொலைகள் இடம்பெறாமல் தடுக்கும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும்படி அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பராக் ஒபாமாவை அந்த செயலணிக் குழு வலியுறுத்திக் கேட்டிருக்கின்றது.

இந்த செயலணிக் குழுவின் மேற்படி அறிக்கை, புதிய அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்கவிருக்கும் பராக் ஒபாமாவையும், அவரின் கீழ் அமெரிக்காவின் புதிய வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்கவிருக்கும் ஹிலாரி கிளிண்டன் அம்மையாரையும் வழிநடத்தும் கொள்கை வழிகாட்டியாக அமையும் என்று குறிப்பிடப்படுவது முக்கிய விடயமாகும்.

இனவழிப்புக் கொடூரம் இடம்பெறும் பேராபத்துள்ள 'சிவப்பு எச்சரிக்கை' நாடுகள் எட்டில் ஒன்றாக இலங்கையை இந்த அறிக்கை சுட்டிக் காட்டியிருக் கையில், சர்வதேச வல்லாதிக்க நாடான அமெரிக்காவின் புதிய நிர்வாகத்தை வெளிவிவகாரக் கொள்கையில் வழி நடத்தும் குறிப்பேடாக இந்த அறிக்கை அமையும் என்பது இலங்கையில் பெரும் கொடூரங்களை எதிர்கொண்டு வரும் தமிழர்களுக்கு ஆறுதல் தரும் செய்தியாகும்.

இந்தச் செய்தி தரும் தெம்புடனும், தமக்கும் வாழ்வியல் மற்றும் மனித உரிமைகள் கிடைக்கும் தினம் விரைவில் மலரும் என்ற நம்பிக்கை எதிர்பார்ப்புடனும் இன்றைய சர்வதேச மனித உரிமைகள் தினத்தை ஈழத் தமிழர்கள் எதிர்கொள்கின்றார்கள்.

# இன அழிப்பிலிருந்து தமிழர்களைப் பாதுகாக்கக் கோரி பிரான்ஸில் சனியன்று மாபெரும் ஒன்று கூடல்

## தமிழர் ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு

பாரிஸ்,டிசெ.10

தாயகத்தில் வாழும் மக்களை சிங்கள அரச பயங்கரவாதத்தின் இன அழிப்பிலிருந்து பாதுகாக்குமாறு கோரி பிரான்ஸில் எதிர்வரும் சனிக்கிழமை மாபெரும் ஒன்றுகூடல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

அனைத்துலகப் போர் நியமங்களையும் மீறி பெரும் அழிவாயுதங்களைக் கொண்டு சிங்கள அரசு ஈழத்தமிழர்கள் மீதான இன அழிப்புப்போரை மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது.

அனைத்துலக மனித நேய அமைப்புக்களை வெளியேற்றியும், போக்குவரத்துப் பாதைகளை மூடியும், பெருமளவு மக்களை அவர்கள் வாழ்விடங் களிலிருந்து வெளியேற்றியும் மிகப்பெரும் மனித அவலத்தை நடத்தி வருகின்றது.

இந்த விடயத்தில் பிரான்ஸ் தேசமும், ஐரோப்பிய ஒன்றியமும், அனைத்துலகமும் காட்டுகின்ற மௌனத்தை கலைத்து எமது மக்களை சிங்கள அரச பயங்கரவாரத்தின் இன அழிப்பிலிருந்து பாதுகாக்கும்படி கோரும் மாபெரும் ஒன்றுகூடல் எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு பிரான்ஸ் மனித உரிமை சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

01.04.2007 அன்று பிரான்ஸில் தமிழ் சமூகப்பணியாளர்கள கைது செய்யப்பட்டு நீண்ட இடைவெளியின் பின்னர் எமது தாயகத்தில் நிகழும் மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கும் ஒன்றுகூடலுக்கு பிரான்ஸ் காவல்துறையினர் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவிற்கு அனுமதி வழங்கியமையானது பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் மத்தியில் நன்றியுணர்வுடன் கூடிய புது எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

சிங்கள தேசத்தின் இன அழிப்புக் கரங்களில் அகப்பட்டு சாவுக்கும் அழிவுக்குள்ளும் வாழும் எம் உறவுகளின் அவலங்களை வெளிக்கொணர கிடைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த பெருமளவில் ஒன்று திரளுமாறு பிரான்ஸ் வாழ் தமிழ் மக்களிடம் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

# மாணவிகளின் 'பர்தா' விவகாரம்; முஸ்லிம் அமைப்புகள் களத்தில்!

கொழும்பு, டிசெ. 10

முஸ்லிம் மாணவிகள் 'பர்தா' அணிவதற்கு கொழும்பில் உள்ள சில பாடசாலைகள் விதித்திருக்கும் தடையை நீக்கச் செய்வதற்கு பல பொது அமைப்புக்கள் நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவென நிமல்கா பெர்னாண்டோ தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு பர்தா விவகாரம் தொடர்பாக நேற்று முன்தினம் கொழும்பில் கூடி சில முடிவுகளை எடுத்தது.

அதன்படி இக்குழு இந்தவாரம் பர்தா அணியத் தடை விதித்திருக்கும் பாடசாலைகளின் அதிபர்களைச் சந்தித்துப் பேசவுள்ளது.

இச் சந்திப்புக்கான அனுமதியைக் கோரி இன்று சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு இந்தக் குழுவால் கடிதங்கள் அனுப்பி வைக்கப் படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவையும் சந்தித்துப் பேச முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரை தாம் இந்த நடவடிக்கையில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்று மேற்படி குழுவில் உறுப்பினராகவுள்ள முஸ்லிம்களின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப் பின் தலைவர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். (சி)

# குடாநாட்டில் 65 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் மழை வெள்ளம், புயற்காற்றுக் காரணமாகப் பாதிப்பு

நல்லூர்,டிசெ.10

அண்மையில் வீசிய 'நிஷா' புயல் மற்றும் மழை வெள்ளம் என்பவற்றால் குடாநாட்டில் 65 ஆயி ரத்து 411 விவசாயக் குடும்பங்களும் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட விவசாய கூலித் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் மறுநாள் புதன்கிழமை வரை பெய்த பெருமழை மற்றும் கடல் நீர் உட்புகுந்தமை போன்றவற்றால் 2008-2009 காலபோக பயிர்ச்செய்கையில் ஆயிரத்து 350.76 மில்லியன் ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப் பீடு செய்யப்பட்டுள்ளது.

காலபோக நெற்செய்கையில் 19 ஆயிரத்து 370 மெற்றிக் தொன் உற்பத்தி எதிர்பார்க்கப்பட்டது. வெள்ளப் பெருக்கால் மொத்த நெற் செய்கைக்கான இழப்பு 494 மில்லியன் ரூபா.

வெங்காயம், புகையிலை, சோளம், அவரை, சிறுதானியப் பயிர், கிழங்கு உட்பட பழமரச் செய்கைகளும் முழுமையான பாதிப்புக்குள்ளாகின. 5600 மாமரங்களும் 2300 பழமரங்களும் வேரோடு சாய்ந்துள்ளன.

உள்நாட்டு மரக்கறிகள், மேல் நாட்டு மரக்கறிகள், இலைவகைகள் என்பவற்றுடன் நீண்டகால, குறுகிய கால முருங்கை மரங்களும் முறிந்தும் வேருடன் சாய்ந்தும் போயுள்ளன. இவற்றின் மொத்த அழிவு 274.6 மில்லியன் ரூபா - என்றார். (202-111)

# மோ.சைக்கிள் விபத்தில் வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற வீதி விபத்தொன்றில் படுகாயமடைந்த வயோதிபர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

மீசாலை மேற்கைச் சேர்ந்த கார்த்தி குணசிங்கம் (வயது - 61) என்ற வயோதிபரே இவ்வாறு மரணமானார்.

இந்த வயோதிபர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளும் மற்றொரு மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதாலேயே இந்த விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த நிலையில் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் அன்றிரவு அங்கு மரணமானார் எனக் கூறப்பட்டது. (50)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 26 | 11.12.2008<br>வியாழக்கிழமை |
| திதி: | சதுர்த்தசி<br>பி.இ.01.45வரை |
| நட்சத்திரம்: | கார்த்திகை<br>மு. இ. 06.58வரை |
| | கார்த்திகை விரதம் |
| [illegible] | 07.50 - 09.20 |
| ராகுகாலம்: | 03.50 - 03.20 |

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# நோயாளர்களைப் பார்வையிடச் செல்லும் மக்கள் மீது தீவிர சோதனை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்.போதனா வைத்தியசாலையின் விடுதிகளுக்கு 'வார்ட்டுக்களுக்குச்' செல்லும் பொதுமக்கள் அனைவரும் தீவிர சோதனையின் பின்னரே உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

கடந்த 7ஆம் திகதி முதல் வைத்தியசாலையில் உள்ள நோயாளர்களைப் பார்வையிடுவதற்குப் 'பாஸ்' நடைமுறை கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து பொதுமக்கள் மீதான சோதனை நடவடிக்கைகளும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

வார்ட்டுக்களில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களைப் பார்வையிடச் செல்லும் பொதுமக்கள் கடுமையாகச் சோதனைக்கு உட்படுத்தப் படுகின்றனர். அவர்கள் கொண்டு செல் லும் உணவுப் பொதிகள் உட்பட அனைத்துப் பொதிகளும் தீவிரமாகச் சோதனையிடப்படுவதாகத் தெரிவிக் கப்பட்டது.

இந்த சோதனை நடவடிக்கைகள் காரணமாகத் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (50-149)

# கிரிக்கெட் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம்

யாழ்.மாவட்டக் கிரிக்கெட் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு 310, நாவலர் வீதியில் அமைந்துள்ள கிரிக்கெட் அக்கடமியில் நடைபெறவுள்ளது.

வருடத்தின் இறுதிக் கூட்டமாகையால் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு செயலாளர் அறிவித்துள்ளார். (50)

# இருமுடிகட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.10

கோண்டாவில் சபரீச ஐயப்பன் கோயிலில் இரு முடி கட்டும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமை இரு முடிக்கான நெய்த் தேங்காய்க்கு நெய்நிரப்பும் நிகழ்வும்-

26ஆம்திகதி ஐயப்பன் கோயில் பதினெட்டுப் படிக்கட்டுக்களில் படியேறும் நிகழ்வும்-

27ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு நெய் அபிஷேகமும் இடம்பெறும்.

# பட்டம் ஏற்றிய மாணவன் கிணற்றில் தவறி வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

அச்சுவேலி, இடைக்காட்டுப் பகுதியில் பட்டம் ஏற்றிக் கொண்டிருந்த மாணவன் கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமானார்.

நேற்றுப் பிற்பகல் 2மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் இடைக்காடு மகா வித்தியாலய மாணவனான வீரேஸ்வரன் பானுஜன் (வயது 12) என்பவரே மரணமானார்.

சம்பவ இடத்தில் விசாரணை நடத்திய அச்சுவேலிப் பொலீஸார் சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர்.

பிரஸ்தாப மாணவன் கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் திறமையுடன் சித்தியடைந்துள்ளார்.

அவரைப் பாராட்டி அண்மையில் பாடசாலையில் விழாவும் இடம்பெற்றது. (1-25-78)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பை தாக்குதல்: பாகிஸ்தானின் நடவடிக்கை குறித்து அமெ. திருப்தி

வாஷிங்ரன், டிச, 10

மும்பைத் தாக்குதலை அடுத்து தீவிரவாதிகளை ஒடுக்குவதில் பாகிஸ்தான் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இத் தாக்குதல் தொடர்பான விசாரணையை மேற்கொள்ள இது பெரிதும் இந்தியாவுக்கு உதவும் என அமெரிக்கா பாராட்டியுள்ளது.

பாகிஸ்தான் நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீரில், பாகிஸ்தான் படைகள் திங்கட்கிழமை, திடீர் தேடுதல் வேட்டையை மேற்கொண்டன. மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய தீவிரவாதக் குழுவின் அலுவலகங்கள் சுற்றிவளைக்கப்பட்டு, சோதனையிடப்பட்டன.

இத் திடீர் வேட்டையின்போது, லஷ்கர்-ஈ-தொய்பாவின் செயற்பாட்டுக் குழுவின் தலைவர் ஷாகியுர்-ரஹ்மான் லக்வி மடக்கிப் பிடிக்கப்பட்டார். இவரே மும்பாய்த் தாக்குதலுக்கு உத்தரவிட்ட நபர் என இந்திய அரசு குற்றஞ்சாட்டி வருகிறது.

பாகிஸ்தான் தரப்பில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றைக் கண்கூடாக அவதானிக்கிறோம். எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை பாகிஸ்தான் அரசே விளக்கும் என அமெரிக்க இராஜாங்க அமைச்சினைச் சேர்ந்த சீன் மெக்கோர்மக் நிருபர்களிடம் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இத்தகைய பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெறாது தடுப்பதற்கான பொறுப்பு பாகிஸ்தானுக்குண்டு. இந்தத் தீவிரவாத வலையமைப்பு பணியகத்தை அது தகர்த்தெறிய வேண்டும். தீவிரவாத வன்முறைகளுக்கு, பரவலான வலையமைப்பைக் கொண்ட பணியகமே பொறுப்பாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாகிஸ்தான் மண்ணிலுள்ள தீவிரவாதிக்ளால், உலகில் எந்த ஒரு நாட்டிலும் எதிர்காலத்தில் இத்தகைய தாக்குதல்கள் இடம்பெறக் கூடா. அத்தகைய ஒரு நிலைப்பாட்டைக்காண தாம் விரும்பவில்லை என்றும் அவர் கூறினார்.

இத்தகைய தாக்குதல்கள் மீள இடம் பெறக் கூடாதென்பதில் நாம் உறுதிப்பாட்டோடு இருக்கிறோம். இத்தகைய நிலைப்பாட்டை உத்தரவாதப்படுத்திக்கொள்ள, அனைத்து ஆர்வமுடைய நாடுகளுக்கிடையே நெருங்கிய ஒத்துழைப்பு அவசியம். இதனை நான் வலியுறுத்திக் கூறுகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தீவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை வெள்ளைமாளிகை பெண் பேச்சாளர் டானா பெரினோவும் வெகுவாகப் பாராட்டியுள்ளார். பாகிஸ்தான் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதில் சந்தேகமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தீவிரவாதிகள் இருவர் பாகிஸ்தானில் கைது

இஸ்லாமாபாத், டிச. 10

மும்பைத் தாக்குதலால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே பதற்றம் நிலவி வரும் இத்தருணத்தில், இரு முன்னணி தீவிரவாதத் தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

லஷ்கர்-இ-கொய்பா செயற்பாட்டுக் குழுத் தலைவர் ஷாகி-யுர்-ரஹ்மான் லக்வி, ஜெய்ஸ்-ஈ-மொஹமத் தீவிரவாத அமைப்பின் தலைவர் மஷுட் அஸ்ஹர் ஆகிய இருவரும் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்கள் என பாதுகாப்பு அமைச்சர் அஹ்மத் முக்தார் தெரிவித்தார்.

இருவரும் திங்கட்கிழமை திடீர் வேட்டையை மேற்கொண்ட பாகிஸ்தான் படையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர் என பாதுகாப்பு அமைச்சர் மேலும் இந்திய சி.என்.என். - ஐ.பி.என். தொலைக்காட்சி அலை வரிசைக்குக் குறிப்பிட்டார்.

## ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குப் பயணிக்க மேலும் 11 சிம்பாப்வே அதிகாரிகளுக்குத் தடை

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குப் பயணிக்க முடியாதவாறு, மேலும் 11 சிம்பாப்வே அதிகாரிகளுக்கு அவ்வொன்றியத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜனாதிபதி முகாபேயை பதவியிலிருந்து உடனடியாக விலகுமாறும் கூட்டுக்கோரிக்கையொன்றை விடுத்துள்ளது. முகாபே 28 வருடகாலமாக ஆட்சியிலிருந்து வருகிறார்.

சிம்பாப்வேயில் வாந்திபேதி தீவிரமாக பரவிவருகிறது. உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பொருளாதாரம் படுமோசமாக வீழ்ச்சி கண்டுள்ளது. பதவி விலகுமாறு முகாபேயை எதிரணியினர் வலியுறுத்தி வருகின்றனர். எனினும், அவர் எதற்கும் அசைந்துக் கொடுக்கும் நிலையில் இல்லை.

மேற்குலகம் சிம்பாப்வேக்கு எதிராக விதித்துள்ள பொருளாதாரத் தடைகளால்தான் நாடு நெருக்கடிகளுக்குள்ளாகியுள்ளது என முகாபே குற்றஞ்சாட்டி வருகிறார். அதே வேளை, முகாபேயின் எதேச்சதிகாரப் போக்கே, சீரழிவுகளுக்கான காரணமாகும் என விமர்சகர்கள் சாடி வருகிறார்கள்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு பயணிக்க முடியாதவாறு, ஜனாதிபதி ரொபர்ட் முகாபே உட்பட 160க்கு மேற்பட்ட சிம்பாப்வே அதிகாரிகளுக்கு எதிராக ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுள்ளது. தடை விதிக்கப்பட்டுள்ளோர் பட்டியலில் தற்போது ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்களால் மேலும் 11 அதிகாரிகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் கொச்னர் அறிவித்துள்ளார்.

பதவி விலகுமாறு வலியுறுத்தி முகாபேயுக்கு அழுத்தம் கொடுப்பதற்கான தருணம் வந்து விட்டது என நான் நினைக்கிறேன் என ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகாரக் கொள்கைக்கான தலைவர் சேவியர் சொலானா, பிரசல்ஸில் ஒன்றிய அமைச்சர்கள் மட்ட மாநாடு நடைபெறுவதற்கு முன்னர் தெரிவித்துள்ளார்.

இதே கோரிக்கையை அமெரிக்கா, சிம்பாப்வேயை முன்னர் தனது காலனித்துவ ஆட்சிக்குட்படுத்தி வைத்திருந்த பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளும் விடுத்துள்ளன. சுழற்சி அடிப்படையில் ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தற்போது தலைமை வகிக்கும் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சர்கோஷி, "சிம்பாப்வே போதிய அளவு அவலத்துக்குள் ஆழ்ந்துள்ளது. இது போதும். ஜனாதிபதி முகாபே பதவியிலிருந்து வெளியேறிவிடவேண்டும்" என குறிப்பிட்டுள்ளார்.

### உலக அரங்கில்

## அதிகாரிகளுக்கு எதிராக முறையிடுவோருக்கு தென் சீனாவில் வித்தியாசமான தண்டனையாம்

பீஜிங், டிச, 10

தென்சீன நகரான சிண்டாயில் அரச அதிகாரிகளுக்கு எதிராக முறையீடு செய்யும் பிரஜைகள் கடத்தப்பட்டு, மனநோயாளர் மருத்துவமனைகளில், தாங்கள் முறையீடுகளைக் கைவிடும்வரை தடுத்து வைக்கப்படுகிறார்கள் என பீஜிங் செய்திகள் தெரிவிக்கின்றன.

உள்ளூர் அதிகாரிகளுக்கு எதிராக முறையீடு செய்த 18 பேர் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் பலர், அதிக காட்டமான போதை வஸ்துக்களை உட்கொள்ளுமாறு பலாத்காரமாக நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

சன் பவு என்பவர் தனது கிராமத்துக்கருகிலுள்ள பாழ்பட்ட விவசாய நிலம் தொடர்பாக, அதிகாரிகளுக்குப் புகாரிட்டார். உடனடியாக அவர் கடத்தப்பட்டு, மனநோயாளர் மருத்துவமனையில், 20 நாள்கள் தடுத்து வைக்கப்பட்டு, வலுக்கட்டாயமாக போதைப் பொருள்களை உட்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டு வந்துள்ளார் என பீஜிங் செய்திப் பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

இனிமேல் அதிகாரிகளுக்கு எதிராக முறையீடு செய்யமாட்டேன் என அளித்த வாக்குறுதியை அடுத்து, எச்சரிக்கப்பட்டு, மனநோயளர் மருத்துவமனையிலிருந்து செல்ல இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று இப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இரு ஆண்டுகளுக்கு முன்னர், மற்றுமொரு நபர் காணி விவகாரம் தொடர்பாக முறையீடு செய்தமைக்காக, பொலிஸாரால் கைது செய்யப்பட்டு,சிண்டாய் மனநோயாளர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், இன்னும் இவர் விடுவிக்கப்படவில்லை என்றும் இந்த ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

## குயுபெக் மாநிலத் தேர்தலில் கனேடிய ஆளும் கட்சி வெற்றி

கனேடிய குயுபெக் மாநில சட்ட சபைத் தேர்தலில் ஆளும் லிபரல் கட்சி வெற்றி பெற்றுள்ளது. இது பிரஞ்சு மொழி பசும் மக்கள் செறிந்து வாழும் மாநிலமாகும்.

125 ஆசனங்களைக் கொண்ட இம்மாநில சட்ட சபைக்கான தேர்தலில் ஆளும் லிபரல் கட்சி 66 ஆசனங்களையும் பிரிவினைவாத குயுபிகோயிஸ் கட்சி 51 ஆசனங்களையும் ஈட்டியுள்ளன என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்கவும் இது விடயத்தைக் கையாளுவதற்கும் தமக்குப்பெரும்பான்மை அவசியம் என லிபரல் மாநில முதல்வர் ஜீன் சாரிஸ்ட் தெரிவித்தார். அதற்கு தற்போதைய வெற்றி உறுதுணையாகவுள்ளது என்றும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

"பொருளாதாரப் புயலை நாம் எதிர்நோக்குகின்றோம். எமது பொருளாதாரம் உலகளாவிய ரீதியில் திறந்து விடப்பட்டுள்ளது. எனினும், உலகு சிக்கலில் சிக்கி தவி [illegible]க்கொண்டிருக்கிறது" என அவர் தமது சொ[illegible]ந்த ஊரான ஷேர்புரூக்கில் ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"இந்தப் பொருளாதார' நெருக்கடியிலிருந்து மீள குயுபெக் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்" என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

எதிர்க்கட்சிகள் கன்சர்வேடிவ் சமஷ்டி அரசைக் கவிழ்ப்பதற்கான நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. இது தருணத்தில் குயுபெக் மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றுள்ளது.

கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹார்பரின் சிறுபான்மை அரசைக் கவிழ்க்கும் பொருட்டு, அவருக்கெதிரான பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் முயன்றன. எனினும், நாடாளுமன்ற அமர்வை ஜனவரி வரை இடைநிறுத்தம் செய்து வைப்பதில் கடந்த வாரம் அவர் வெற்றி கண்டு தப்பியுள்ளார்.

## ஈரானிய அணு விவகாரம் குறித்த புஷ்ஷின் கொள்கையை கைவிடுக!

### ஒபாமாவிடம் கோரிக்கை

ஈரானிய அணு விவகாரத்தில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு. புஷ் மேற்கொண்ட அணுகுமுறையைக் கடைபிடிக்கவேண்டாமென, அமெரிக்கா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள பராக் ஒபாமாவுக்கு ஈரான் கோரிக்கை விடுத்துள்ளது.

"இது விடயத்தில் புஷ் நிர்வாகம் மேற்கொண்ட அணுகுமுறை பலிதமாகவில்லை. அது பிசுபிசுத்து விட்டது. எனவே, அதனை கைவிடுவதே விவேகமான செயற்பாடு" என்றும் ஈரான், ஒபாமாவைக் கேட்டுள்ளது.

ஈரான் தன் சர்ச்சைக்குரிய அணுத்திட்டத்தைக் கைவிட்டு விடவேண்டும் என ஒபாமா ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்டிருந்தார். "இதன் பொருட்டு, இறுக்கமான நேரடி இராஜதந்திர நடவடிக்கை எடுக்கப்படும். இல்லையேல், இறுக்கமான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும்" என்றும் ஒபாமா சூளுரைத்திருந்தார்.

"இது ஏற்றுக்கொள்ளத்தக்க கொள்கையல்ல. வல்வந்தமான ஒரு நிபந்தனை" என ஈரானிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹஸன் கஷ்கவி இதற்குப் பதிலளித்துள்ளார்.



தலையில் தேங்காய் உடைப்பது பற்றி நமக்கு தெரியும். ஆனால் வாயால் தேங்காய் உரிப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஆம், பற்களாலேயே தேங்காய் உரித்துத் தள்ளுகிறார் ஆண்ட்ரெஸ் கார்டின். 60 வயதான இவர், பனாமா நாட்டில் உள்ள கலன் என்னுமிடத்தில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில் வேகவேகமாக பற்களாலேயே தேங்காய் உரித்தார். இவர் 6 மணி நேரத்தில் 500 தேங்காய்களை பற்களாலேயே உரித்து சாதனை படைத்துள்ளார்.

## விமானம் வெடித்துச் சிதறியது: இரு வீடுகள் சேதம்; மூவர் பலி!

### சந்தியாகோவில் சம்பவம்

சந்தியாகோ, டிச.10

பயிற்சியை முடித்துக் கொண்டு சந்தியாகோவின் புறநகர்ப் பகுதியிலுள்ள இராணுவ விமானத் தளத்தை நோக்கித் திரும்பிய ஜெட் போர் விமானமொன்று, வெடித்து தீச்சுவாலைகளுடன் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில் இரு வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டு விட்டன. ஒரு வீட்டிலிருந்த மூவர் கொல்லப்பட்டனர். ஒருவர் காணாமற் போய் விட்டார்.

மிராமர் இராணுவத் தளத்தில் திங்கட்கிழமை மதியம் தரை இறங்குவதற்கு முன்னர் இவ்விமானம் விபத்துக்குள்ளானது. விமானி பாராசூட் மூலம் குதித்து உயிர் தப்பினார். பாராசூட் ஒரு மரத்தில் சிக்குண்டதால் அதில் தொங்கிக் கொண்டிருந்த விமானி காப்பாற்றப்பட்டார்.

"ஒரு ரொக்கெட் வெடிப்பதைப் போல பலத்த சத்தம் கேட்டது. எனது வீடும் தரையும் குலுங்கின. நான் அதிர்ச்சியடைந்தேன். இது என்னைப் பொறுத்த மட்டில், நான் உணர்ந்த பூகம்பத்தை விட உக்கிரமாக இருந்தது என, ஸ்டிவ் கிராஸ்னர் என்பவர் குறிப்பிட்டார். இவர் விபத்து நிகழ்ந்த பகுதியில் வசிப்பவராவார்.

வெடித்து தீச்சுவாலைகளுடன் இவ்விமானம் விழுந்தமையால் இரு வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டு விட்டன. ஒரு வீட்டிலிருந்த மூவரே கொல்லப்பட்டனர். இவர்களில் இரு பிள்ளைகளும், தாயும் அடங்குவர். இவ்விபத்தில் பாட்டியொருவரும் பலியாகியிருக்கலாமென நம்பப்படுகிறது என தீயணைப்புப் படை[illegible].

இந்த வீட்டுக்குள் நால்வர் இருந்துள்ளனர். மூவர் பலியாயினர். ஒருவரைக் காணவில்லை. மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான இரு ஆடம்பர சொகுசு வீடுகளே நிர்மூலமாக்கப்பட்டுள்ளன என தீயணைப்புத் திணைக்களப் பேச்சாளர் மோரிஸ் லுகுயி தெரிவித்தார்.

இந்த விமானம் தடுமாற்றத்துடன் தாழப் பறக்கத் தொடங்கியது. அதிலிருந்து ஒருவர் பாராசூட் மூலம் வெளியேறினார். ஆளில்லாத இரண்டாவது பாராசூட்டையும் கண்டேன். அடுத்து பயங்கர ஓசையுடன் விமானம் வெடித்து, தீப்பிழம்பாக மாறியது. எனது ஜன்னலினூடாக இச்சம்பவத்தை பார்த்தேன் [illegible] என்னும் 25 வயது நபர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைச்செய்கையாளருக்கும் இழப்பு நஷ்டஈடு வழங்கப்படுவதில்லையாம்

வலி.வடக்கு,டிசெ.10

குடாநாட்டில் வாழைச்செய்கையாளர்களுக்கு வருடாந்தம் இயற்கை அனர்த்தத்தினால் பல லட்சக் கணக்கான அழிவுகள் ஏற்படுகின்றபோதிலும் அதற்கான நஷ்டஈடுகள் எவையும் கிடைப்பதில்லை என்று வாழைச்செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் பெய்த தொடர் மழை மற்றும் 'நிஷா' புயல் காரணமாகப் பல லட்சம் பெறுமதியான வாழைகள் அழிவடைந்தமையால் வாழைச் செய்கையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வாழைச்செய்கையாளர்களுக்கான இழப்புகளுக்கு நஷ்டஈடு வழங்குவது சம்பந்தமாக இதுவரை எந்தவகையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையெனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. வாழைச்செய்கையாளருக்கு நஷ்டஈடு வழங்க உரியவர்கள் முன்வருவார்களா என்று பாதிக்கப்பட்டோர் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (203-86)

# இளஞ்சைவ, சைவப்புலவர் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.10

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் அடுத்தாண்டுக்கான இளஞ்சைவப்புவலர், சைவப்புலவர் தேர்வுகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளன. இத்தேர்வுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் பெப்ரவரி 28ஆம் திகதிக்குள் அனுப்பிவைக்குமாறு விண்ணப்பதாரிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்தாண்டு நடத்தப்பட்ட இளஞ்சைவப் புலவர், சைவப்புலவர் தேர்வுகளில் சித்தியடைந்தோர் விவரம் பின்வருமாறு:

**இளஞ்சைவப்புலவர் பரீட்சை -**

**2ஆம் வகுப்பு**

வைரவன் கோகுலன் (ஜேர்மனி), செல்வி தம்பையா வினோ (சாவகச்சேரி), செல்வி மல்லிகாதேவி செல்வரத்தினம் (வட்டுக்கோட்டை).

**3ஆம் வகுப்பு**

செல்வி ஜெயப்பிரியா தம்பித்துரை ஐயர் (அளவெட்டி), செல்வி கோமளேஸ்வரி விநாயகமூர்த்தி (மாதகல்).

**சைவப்புலவர் பரீட்சை -**

**2ஆம் வகுப்பு**

சின்னத்தம்பி தங்கரத்தினராசா (ஜேர்மனி), சின்னத்துரை இராதாகிருஷ்ணன் (கண்டி).

**3ஆம் வகுப்பு**

அருளானந்தம் அரன்மகன் (கொழும்பு), செல்வி தேவகி வைகுந்தநாதன் (கட்டப்பிராய்), மார்க்கண்டுப்பிள்ளை கணநாதன் (வட்டுக்கோட்டை). (201)

# எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நடத்திய போட்டியின் வெற்றியாளர்களுக்குப் பரிசில்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.10

சர்வதேச எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் நடத்தப்பட்ட திறந்த கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. போட்டியில் வெற்றி பெற்றோருக்குப் பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு:-

பரராஜசிங்கம் ராஜேஸ்வரன் - பலாலி வீதி, திருநெல்வேலி, செல்வி சிவசித்திரா பழனி - அரசடி வீதி, யாழ்ப்பாணம், மணிவாசகன் நிமலன் - அபிவிருத்தி உதவியாளர், கோட்டக்கல்வி அலுவலகம், நல்லூர், செல்வி தேவமதி ஜோசப் - மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், ப.வானதி- நவாலி தெற்கு, மானிப்பாய், ஆர்.மயூரன் - பிரம்படி ஒழுங்கை, கொக்குவில், சு.சுஜித் - புகையிரத நிலைய வீதி, கோண்டாவில், ம.மு.செலினி நில்மினி - நெல்லியடி, கரவெட்டி. (203)

# கைத்தொழில் கல்விக் கண்காட்சியும் வர்த்தகச் சந்தையும்

யாழ்ப்பாணம,டிசெ.10

யாழ்.வணிகர் கழகம் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை கைத் தொழில் கல்விக் கண்காட்சியையும் வர்த்தகச் சந்தையையும் நடத்தவுள்ளது. இந்தக் கண்காட்சியிலும் வர்த்தகச் சந்தையிலும் பங்குபற்ற விரும்புபவர்கள் இல.165, மானிப்பாய் வீதியில் உள்ள யாழ்.வணிகர் கழகத்துடன் எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மேற்படி கண்காட்சியும் வர்த்தகச் சந்தையும் யாழ்.மத்திய கல்லூரியிலும், யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளதாக யாழ்.வணிகர் கழகத் தலைவர் அறிவித்துள்ளார். (201)



தென்புலோலி காந்தியூர் சனசமூக நிலைய முன்பள்ளி திறப்பு விழாவில் பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் ச.சந்திரயோகன் மங்கள விளக்கேற்றுவதையும், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், சனசமூகநிலைய முன்னாள் தலைவர் ச.ஸ்ரீஸ்கந்தராசா, புலோலி வடமேற்கு கிராமசேவையாளர் செ.அ.ஞானச்சந்திரன் ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும், சனசமூக நிலைய பொருளாளர் தெ.குகனேஸ்வரன், முன்பள்ளி ஆசிரியை திருமதி எஸ்.இரவீந்திரனுக்கு நினைவுப் பரிசில் ஒன்றை வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்:கர்ணன்)

# கொட்டடிச் சந்தியில் ஆயுள்வேத மருத்துவ நிலையம்

குருநகர்,டிசெ.10

யாழ்.கொட்டடிச் சந்திக்கருகாமையில் மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆயுள்வேத மருத்துவ நிலையம் ஒன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்த மருத்துவ நிலையத் திறப்பு விழாவிற்காக சம்பிரதாயபூர்வமாகப் பால் காய்ச்சும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மருத்துவ நிலையப் பொறுப்பு வைத்திய அதிகாரியுடன் யாழ். பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலக நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (203-51)

# நீதியான அரசியல் தீர்வை ஏற்கத் தமிழ் மக்கள் தயார்

## நாடாளுமன்றில் ஸ்ரீகாந்தா தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.10

தமிழீழ விடுதலைப் புலிகள் என்றும் அரசுடன் அமைதிப் பேச்சில் ஈடுபடத் தயாராக இருக்கின்றனர் என்றும் தமிழ் மக்கள் நீதியான அரசியல் தீர்வை ஏற்கத் தயாராக இருக்கின்றனர் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தரப்பில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட இறுதி விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டமைப்பு எம்.பி.ஸ்ரீகாந்தாவே இவற்றை கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

தமிழ் தேசிய கூட்டமைப்பை அடக்கி ஒடுக்கும் செயற்பாட்டில் அரசு ஈடுபட்டுள்ளது. இதில் ஒரு கட்டமாகவே சிகிச்சைக்காக இந்தியா செல்ல முயன்ற எமது கூட்டமைப்பின் எம்.பி. அரியநேத்திரன் செல்ல விடாமல் தடுக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளால் எம்மை அடக்கி ஒடுக்கலாம் என்று அரசு நினைத்தால் அது பகல் கனவாகவே அமையும்.

நாம் இல்லாது போனாலும் எமது இளைஞர்கள் எமது வெற்றிடத்தை நிரப்புவர். எம்மைப் போல் மக்களுக்காகக் குரல் கொடுப்பர்.

இப்பொழுது நடைபெறும் யுத்தம் தொடர்பில் சிங்கள அரசியல்வாதிகள் அனைவரும் கட்சி பேதமின்றி ஒரு நிலைபாட்டிற்கு வந்துள்ளனர்.

இவ்வளவு காலமும் யுத்தத்திற்கு எதிராகக் குரல் கொடுத்த ஐக்கிய தேசியக் கட்சி இப்போது ஆதரவாகக் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளது.

இதனால் சிங்களத் தலைவர்கள் அனைவரும் தமிழருக்கு எதிராகவே செயற்படுகின்றனர் என்ற மனநிலை தமிழ் மக்கள் மத்தியில் வளர ஆரம்பித்துள்ளது.

தமிழர் பிரச்சினைக்கு யுத்தம்தான் ஒரே வழி என்றால் நாம் என்ன செய்வது? அப்படியாயின் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன் உள்ள தீர்வு என்ன என்பதை ஜனாதிபதி எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ் மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை. அவர்கள் மிகவும் நீதியான அரசியல் தீர்வையே எதிர்பார்த்து நிற்கின்றனர். அதற்கு அவர்கள் என்றும் தயார்.

அதேபோல், அந்த நீதியான தீர்புக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் அரசுடன் அமைதிப் பேச்சில் ஈடுபடவும் தயாராகவே உள்ளனர் - என்றார். (சி)

# சரத் பொன்சேகாவின் கோமாளித்தனமான விமர்சனத்துக்காக மகிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக வருத்தம் தெரிவிக்கவேண்டும்

## இராமதாஸ் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு,டிசெ.10

இலங்கை இராணுவத் தரைப்படைத் தளபதி சரத் பொன்சேகாவின் கோமாளித்தனமான விமர்சனத்துக்காக முப்படைகளின் தலைவர் என்ற முறையில் மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாக வருத்தம் தெரிவிக்கவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழகத் தலைவர்களை அரசியல கோமாளிகள் என விமர்சனம் செய்த இலங்கை இராணுவத் தரைப்படைத் தளபதி சரத் பொன்சேகாவின் விமர்சனம் தொடர்பாக விசனமடைந்த டாக்டர் ராமதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமே சொந்தம். அதில் தமிழர்கள் இரண்டாம் தரக் குடிமக்கள்தான் என்றும், சிங்களவர்களுக்கு அடிமைகளாக வாழ்வதற்கு தமிழர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கொக்கரித்தவர் இவர்.

இப்போது தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் அனைவரையும் கொச்சைப்படுத்தி பேசியிருப்பதன் மூலம் தனது சிங்கள இன வெறியை மீண்டும் ஒருமுறை அடையாளம் காட்டியிருக்கிறார் சிங்களப் போர்ப் படைத் தளபதி.

இலங்கையைப் பொறுத்தவரையில் மஹிந்த ராஜபக்ஷ அரச தலைவராக இருந்தாலும், போர்ப்படைத் தளபதியான சரத் பொன்சேகா தான் அனைத்து அதிகாரமும் படைத்த சர்வாதிகாரி போன்று பேசியும், செயற்பட்டும் வருகின்றார்.

எனவே, அவர் பேசியிருப்பதைத் தனிப்பட்ட ஒருவரின் விமர்சனம் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. இலங்கையின் குரலாகவே, சிங்கள அரசின் குரலாகவே அவரது விமர்சனத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மன்னிப்புக் கேட்கவேண்டும்**

எனவே, சரத்பொன்சேகா கோமாளித்தனமான தனது விமர்சனத்தை உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொண்டு நிபந்தனையற்ற மன்னிப்புக் கேட்கவேண்டும். முப்படைகளின் தலைவர் என்ற முறையில் மஹிந்த ராஜபக்ஷவும், பகிரங்கமாக வருத்தம் தெரிவிக்கவேண்டும். இதனை இந்திய அரசு வலியுறுத்தவேண்டும்.

மன்னிப்பு கேட்கத் தவறினால், இங்குள்ள இலங்கைத் தூதுவரையும், இதர அதிகாரிகளையும் இந்தியாவில் இருந்து வெளியேற்றுவோம் என்று எச்சரிக்கை செய்யவேண்டும்.

சிங்களப்படைத் தலைவரின் இந்த காட்டுமிராண்டித்தன விமர்சனத்தை முதலமைச்சர் கருணாநிதி உடனடியாகப் பிரதமரின் கவனத்திற்கும், வெளியுறவுத்துறை அமைச்சரின் கவனத்திற்கும் எடுத்துச் செல்லவேண்டும்.

இலங்கை இதற்காகப் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்காவிட்டால், தமிழகம் கொந்தளிக்கும் எனத் டில்லிக்கு எடுத்துக் கூற வேண்டும். அத்துடன் வெளியுறவுத் துறை மந்திரி பிரணாப் முகர்ஜியை இன்னும் காலம் தாழ்த்தாமல் 48 மணி நேரத்திற்கு உள்ளாகக் கொழும்புக்கு அனுப்பி நேரிலும் எச்சரிக்கைவிடச் செய்வதுடன், அங்கு தமிழினப் படுகொலைக்குக் காரணமான போர் நிறுத்தப்படுவதன் மூலம் தமிழர்களின் தன்மானத்திற்கு இலங்கைப் போர்ப்படைத் தளபதியால் விடப்பட்டுள்ள அறைகூவலுக்குச் சரியான பதிலடி கொடுக்க வேண்டும். அது ஒன்றுதான் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களை அமைதிப்படுத்த முடியும் எனத் டில்லிக்கு எடுத்து கூறவேண்டும் - என்றார் அவர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி இராசலிங்கம்**
(பூச்சி-ரிங்கர்)

பிறப்பு: 15.06.1949 இறப்பு: 10.12.1999

(10.12.2008)

அன்பின் சிகரமே! பாசத்தின் உறைவிடமே!
ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
ஆறாது எம்மனம்.

*பிரிவால் துயருறும்:*
வே.துரைரெத்தினம் (துரை-மைத்துனர்),
மஞ்சு (மகள்), சுரேஸ்.
பாடசாலை வீதி, ஆறுகால்மடம்.

(80565)

## 31 ஆம் நாள் நினைவு தினமும் நன்றி கூறலும்

### திருமதி அருந்ததி சிவலிங்கம்

(மகாலிங்கம்)

முருகையன் கோவிலடி, தீருவில், வல்வெட்டித்துறை,

கடந்த 11.11.2008 அன்று திருச்சியில் சிவபதமடைந்த எமது குடும்ப விளக்காகிய வல்வெட்டித்துறை தீருவில் முருகையன் கோவிலடியைச் சேர்ந்த சிவலிங்கம் (மகாலிங்கம்) அருந்ததி அவர்களின் மரணச்செய்தி அறிந்து எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறிய வங்கிச் சமூகத்தினருக்கும், வல்வை உறவுகளுக்கும், பத்திரிகை வாயிலாகவும் மற்றும் தகவல்கள் மூலமும் ஆறுதல் தந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் திருச்சியிலேயே நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

*தகவல்:*
ந.சிவரத்தினம் (ஜெயம்-மருமகன்), நளினி சிவரத்தினம் (வசந்தி-மகள்).
இலங்கை வங்கி, உதவிப் பொது முகாமையாளர் காரியாலயம்,
யாழ்ப்பாணம்.
முருகையன் கோவிலடி, தீருவில், வல்வெட்டித்துறை.

(சி/555820)

## ஆறாண்டு நினைவலைகள்



தோற்றம்: 14.12.1935
மறைவு: 17.11.2002
*திதி : திரயோதசி*
*10.12.2008*

### அமரர் சுப்பிரமணியம் கந்தசாமி

(இளைப்பாறிய ஆசிரியர், யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை)

வருடங்கள் ஆறு சென்றாலும் ஆறாது எம் துயர்
தந்தையாய் ஆசானாய் இவ்வுலகில் அமர்ந்து
அறிவு பல புகட்டி எமை வளர்த்த தெய்வமே!
நீர் எங்கு எமை விட்டு சென்றீரோ....?
உம் நினைவுகள் என்றும் எம் இதயத்தில் நிலைத்திருக்கும்.

சங்கத்தானை, சாவகச்சேரி.

*உங்கள் பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.

(80565)

## எங்கள் அம்மாவுக்கு ஐந்தாம் ஆண்டின் இதய அஞ்சலி



*அன்னை மடியில்*
*05.12.1933*
*ஆறுமுகன் அடியில்*
*06.12.2003*
திதி: திரயோதசி (10.12.2008)

### திருமதி கார்த்திகேசு சின்னமணி

பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்து எமை
பாசத்துடன் வளர்த்தாய் பாரினிலே!
கண்ணை இமை காப்பது போல
எம்மை எல்லாம் காத்தீரே!
காலமெல்லாம் தரணியில் நாம்
வாழ வழி சமைத்தீரே!
வருடம் ஐந்தென்ன யுகம் பல
சென்றாலும் அகலாது உம் நினைவு
அவனியில் உம் வாழ்க்கை அழிந்தபோதும்
உம் நினைவே எம் மனதில் என்றுமம்மா.

செல்வி வளவு,
இமையாணன்,
உடுப்பிட்டி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(80560)

# அரசுக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை

## ஐ.தே.க.தாக்கல் செய்தது

கொழும்பு, டிசெ.10

'ஹெட்ஜிங்' எரிபொருள் ஒப்பந்தம் தொடர்பாக அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளித்தது.

அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில்- நாட்டுக்குப் பாதகம் ஏற்படுத்தும் வகையில்- உள்ளூர் மற்றும் சர்வதேச வங்கிகளுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக சர்ச்சைக்குரிய 'ஹெட்ஜிங்' ஒப்பந்தத்தை அரசு செய்துள்ளது.

மத்திய வங்கி ஆளுநரின் ஆலோசனையை அடுத்தே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், பொற்றோலிய வள அமைச்சு, நிதி அமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சு மற்றும் மத்திய வங்கி ஆகியன முரணான அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

இந்த ஒப்பந்தம் காரணமாக இலங்கை 250 கோடி அமெரிக்க டொலர் கடனுக்கு ஆளாகியுள்ளது.

இந்த ஒப்பந்தம் காரணமாக உலக சந்தையில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் விலைக்குறைப்பின் நன்மையை இந்நாட்டு மக்களால் அனுபவிக்க முடியாதுள்ளது.

நாட்டின் நிதி நிலைமையைத் திறமையான முறையில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசால் நிர்வகிக்க முடியாதென்பது இந்த ஒப்பந்தம் மூலம் தெளிவாகின்றது. ஆகவே நாடாளுமன்றிற்கு இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(சி)

## உணவல்லாத பொருள்கள் பாதிப்புற்றோருக்கு விநியோகம்

நவாலி, டிச. 10

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் உணவல்லாத பொருள்களை கடந்தவாரம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கியுள்ளது.

(203- 100)

## மத்திய கிழக்கு நாடுகளுக்கு 5,000 தாதிமார்

கொழும்பு, டிச. 10

இலங்கைத் தாதிமார்கள் 5 ஆயிரம் பேரை அடுத்த வருடம் மத்திய கிழக்கு நாடுகளில் சேவைக்காக அனுப்ப சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அபுதாபி, ஓமான் மற்றும் லிபியா ஆகிய நாடுகளில் அரச பிரிவுகளுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கே இவர்கள் அனுப்பப்படவுள்ளனர் என சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இந்தத் தாதிமார்களுக்கான பாதுகாப்பு, உயர் சம்பளம் மற்றும் தங்குமிடவசதி பற்றி இந்த நாடுகளுடன் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார் (சி)

**இறைச்சிக் கோழி விற்பனை**
புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.
(80477)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
12.12.1979

மறைவு:
10.12.1998

### செல்வி வயிரவநாதன் ஜெயந்தி

(10.12.2008)

காலம் ஓடி விரையலாம் எனினும்
இலட்சிய நோக்கும் இதய உறுதியும்
அன்பும் பாசமும் எம்மை விட்டகலுமோ?
அரசகேசரி விநாயகர் பாதங்களில்
சிவந்த தோர் தாமரையாய்த் திகழ்க
அழியா உனது நினைவுகள் யாவுமே.

என்றும் துயருறும்:
பாசமிகு அப்பா, அம்மா, சயந்தினி (சகோதரி-லண்டன்),
லதன் (மைத்துனர்-லண்டன்),
கனகமனோகரி (சகோதரி-ஆசிரியை, புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி),
சிவப்பிரியா (சகோதரி-யாழ்.பல்கலைக் கழகம்),
பிரணவரூபன் (தம்பி-மாணவன்) மற்றும் உற்றார், உறவினர்.
கரந்தன் வீதி, நீர்வேலி.

(80532)

**COMPUTER EXPRESS**

நெல்லியடியிலும் நாம்......

வடமராட்சி மாணவர்களின் நலன்கருதி குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையினை வழங்க எமது கிளை நிறுவனத்தினை No 07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyadi.ல் ஆரம்பித்துள்ளோம்

HEAD OFFICE: No 167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250

BRANCH OFFICE: No 07, Kanpollai Lane, Kodikamam Rd, Nelliyadi.
Phone : 0777222422

Computer Courses: 80%OFF

| | | | |
|---|---|---|---|
| DIPLOMA IN MICROSOFT OFFICE | 3Months | | 1,500 |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4Months | ~~10,000~~ | 2,000 |
| DIPLOMA IN WEB PAGE DESIGNING | 3Months | ~~10,750~~ | 2,150 |
| DIPLOMA IN GRAPHIC DESIGNING | 4Months | ~~10,750~~ | 2,150 |
| DIPLOMA IN HARDWARE ENGINEERING | 3Months | ~~10,000~~ | 2,000 |
| DIPLOMA IN AUTO CAD | 3Months | ~~10,000~~ | 2,000 |
| DIPLOMA IN ACCOUNTING PACKAGE | 3Months | ~~10,750~~ | 2,150 |
| DIPLOMA IN COMPUTER SCIENCE | 4Months | ~~10,750~~ | 2,150 |
| HONOURS DIP. IN COMPUTER SCIENCE | 5Months | ~~13,000~~ | 2,600 |

50%OFF Advance Courses,

| | | |
|---|---|---|
| Dip. in Multimedia | ~~5500~~ | 2750 |
| Dip. in Video Editing | ~~6500~~ | 3250 |
| Dip. in Networking | ~~10000~~ | 5000 |

கம்யூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள்
நெல்லியடியில் பதிவுசெய்யும் மாணவர்களிற்கு விசேட கட்டண சலுகை வழங்கப்படும்.

யாழ்நகரில் வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I 13/12/2008 10AM
Batch II 14/12/2008 10AM
Batch III 15/12/2008 11AM
Batch IV 16/12/2008 09AM

நெல்லியடியில் வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I 11/12/2008
Batch II 13/12/2008
Batch III 14/12/2008
Batch IV 16/12/2008
10.00AM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை கவின்கலை மன்றத்தினால் தயாரித்து வெளிடப்பட்டுள்ள ''மழலைகள் அமுதம்'' என்ற இறுவட்டு வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனன் இறுவட்டினை வெளியிட்டு வைப்பதை முதலாவது படத்திலும், இறுவட்டினை தயாரித்தளித்த கலைஞர்களில் ஒருவருர் பிரதம விருந்தினரால் கௌரவிக்கப்படுவதனை இரண்டாவது படத்தில் காணலாம். தயாரிப்பில் பங்குபற்றிய மழலைகள் மற்றும் கலைஞர்கள் பாடசாலைச் சமூகத்தோடு சேர்ந்து எடுத்துக் கொண்ட படத்தினை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்:அருனன்)


## ஒய்வூதியம் பெறுவோரிடம் உயிர்வாழ் அத்தாட்சிப் பத்திரம் திரட்டப்படுகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.10

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களிடமிருந்து உயிர்வாழ் அத்தாட்சிப் பத்திரம் திரட்டப்படுகின்றது.

டிசெம்பர் மாத ஓய்வூதிய பற்றுச் சீட்டுடன் இதற்கான படிவம் இணைக்கப் பட்டுள்ளதாகவும், படிவத்தினை பூர்த்தி செய்து கிராம அலுவலரின் சிபார்சுடன் எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையில் கையளிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

குறித்த காலப்பகுதிக்குள் படிவத் தினைச் சமர்ப்பிக்காத ஓய்வூதியர்களுக்கு 2009 பெப்ரவரி மாதம் தொடக்கம் ஓய்வூதியம் வழங்குவது நிறுத்தப்படு மெனவும் அறிவித்துள்ளார். (203-207)




## தீவக வலய ஆசிரியருக்கு வேதனம் வழங்கப்படுகிறது

ஊர்காவற்றுறை,டிசெ.10

தீவக கல்வி வலய பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்றுக் கடமை யாற்றிவரும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களது கடந்த மாத வேதனம் வங்கிகள் ஊடாக வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை வலயப் பணிமனைக்கு வருகைதந்து சம்பளப் பட்டியலில் கையொப்பமிடாத ஆசிரியர்கள் உடன் வருகைதந்து கையொப்பமிடுவதன் மூலம் தாமதமின்றி சம்பளத்தொகை உரிய வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என தீவக கல்வி வலய கணக்காளர் எஸ்.பரதன் அறிவித்துள்ளார். (203-127)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.10

யாழ்.முகாமையாளர்கள் கழகம் குடாநாட்டில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12.30 மணிவரை நடத்தவுள்ளது.

நல்லூரில் உள்ள ஈரோவில் மாநாட்டு மண்டபத்தில் இக்கலந்துரையாடல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (201)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய பொருள்கள் விநியோகம்

### செயலகத்தால் விலை நிர்ணயிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.10

குடாநாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வார காலத்திற்குத் தேவையான பொருள்களை விநியோகம் செய்வதற்கான விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக யாழ். செயலகம் சகல ப.நோ.கூ. சங்கங்களுக்கும் அறிவித்துள்ளது.

ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு பின்வரும் அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த விலை நிர்ணயத்தின்படி ஒரு கிலோ அரிசி 87 ரூபாவாகவும், ஒரு கிலோ கோதுமைமா 72 ரூபாவாகவும், ஒரு கிலோ சீனி 72 ரூபா 50 சதமாகவும், ஒரு கிலோ பருப்பு 138 ரூபாவாகவும், லக்ஸ்பிறே ஒன்று 250 ரூபாவாகவும் விநியோகம் செய்யப்படவுள்ளன. (203-224)

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மழையால் குடிசைகள் முற்றாகச் சேதம்

கோப்பாய், டிசெ.10

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புத்தூர் கிழக்கு ஊறணி, அச்செழு பேபியாள்புரம் ஆகிய கிராமங்களில் 100 இற்கும் மேற்பட்ட குடிசை வீடுகள் முற்றாக அழிவடைந்துள்ளன.

இதனால் அப்பகுதி மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவர்களுக்கான உணவு பொருள்களை பிரதேச செயலகம் வழங்கி வருகின்றது.

எனினும் இவர்களது வீடுகளைப் புனரமைத்து வழங்க எவரும் முன்வரவில்லை எனவும் அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (203-72)

## திக்கம் மானாண்டிப் பொதுச் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு; பாவனையாளர் விசனம்

கரவெட்டி, டிசெ.10

திக்கம், மானாண்டிப் பொதுச் சந்தையில் போதிய வசதிகள் இன்மையால் அங்கு சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது. இதனால் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்தச் சந்தைக்குக் கடந்த ஒரு வருடகாலமாகத் தண்ணீர் வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை.

இங்கு குழாய்க்கிணறு உள்ள போதிலும் அது பழுதடைந்த நிலையிலேயே காணப்படுவதாகவும் அதனைத் திருத்துவதற்கான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறு தண்ணீர் வசதிகள் எதுவும் இங்கு இல்லாமையால் மலசலகூடங்கள் துர்நாற்றம் வீசுவதாகவும் அவற்றைப் பயன்படுத்த முடியாமையால் சந்தைப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகவும் கூறப்படுகின்றது.

இதே வேளை சந்தைப் பகுதியில் காணப்பட்ட பழைய கட்டடம் ஒன்று கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் உடைக்கப்பட்டதாகவும் இன்னும் அவை அகற்றப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறைப் பிரதேசசபைக்கு உட்பட்ட மேற்படி சந்தை தொடர்பாக உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (203-70)

## 'நிஷா'வால் வடமராட்சியில் மின்தடை; சில இடங்களில் இன்னும் சீராகவில்லை

கரவெட்டி,டிசெ.10

அண்மையில் ஏற்பட்ட 'நிஷா' புயல் மற்றும் மழை காரணமாக வடமராட்சியில் பெரும்பாலான இடங்களில் மின்தடை ஏற்பட்டிருந்தது.

திருத்தம் செய்யப்பட்ட பின்னர் மின்சார சபையால் மின் விநியோகம் செய்யப்பட்டபோதும் இவற்றில் சில இடங்களுக்கு இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை என்று பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உரிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுத்து இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மின்தடை தொடர்பான விவரங்கள் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-70)

## யாழ்.ப.நோ.கூ.சங்கப் பணியாளர்கள் 48 பேருக்கு மேலும் 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.10

வெள்ள அனர்த்தத்தின்போது கடமைக்குச் சமுகமளித்து வெள்ளத்தில் இருந்து சங்க உடைமைகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை மீட்டுப் பாதுகாத்த யாழ்.ப.நோ.கூ.சங்கப் பணியாளர்களில் 48 பேருக்கு இரண்டாம் கட்டமாக 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட் டுள்ளது.

ஏனைய பணியாளர்களுக்கு இரண்டாம் கட்டமாக ஆயிரத்தில் இருந்து இரண்டாயிரம் ரூபா வரை வழங்கப்பட்டுள்ளது என்று சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

அண்மையில் பெய்த மழை காரணமாக யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்குள் வெள்ளம் புகுந்து சேதப்படுத்தியமை தெரிந்ததே. (203-224)

## பிறப்பு, இறப்பு பதிவகம் அங்குரார்ப்பணம்

கரவெட்டி,டிசெ.10

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவகத்தை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் திருமதி ம.இராசரத்தினமும் சிறப்பு விருந்தினராக காணி மேலதிக முன்னாள் மாவட்டப் பதிவாளர் திருமதி ச.தியாகராஜனும் கலந்து கொள்வர். (203-70)

## ஆதாரம் காட்டி பணத்தைப் பெறலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

மீசாலை சந்தியில் தவறவிடப்பட்ட ஒரு தொகைப் பணம் சங்கத்தானை, தட்டாதெருவைச் சேர்ந்த கே.சண்முகலிங்கம் என்பவரால் கடந்த சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பணத்தைத் தவறவிட்டவர்கள் ஆதாரங் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-207)

## தையல் பயிற்சிக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.10

சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலக பிரிவுகளில் கிராமிய அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்படவுள்ள தையல் பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வடலியடைப்பு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விண்ணப்பித்தவர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் விண்ணப்பித்து கடிதங்கள் கிடைக்காதவர்களும் கிடைத்தவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு பின்வரும் ஆவணங்களுடன் கலந்து கொள்ளுமாறும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோர் பிறப்புச் சான்றிதழ், குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை, கல்வித் தகைமைச் சான்றிதழ், பாடசாலை விடுகைப் பத்திரம் ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு கூறப்பட்டுள்ளது. (203)

## வல்வையில் இரத்ததான முகாம்

கரவெட்டி,டிசெ.10

யாழ்.போதனா வைத்தியசாலையின் அனுசரணையுடன் வல்வை மக்களும் செஞ்சிவைச் சங்க பருத்தித்துறை கிளையினரும் இணைந்து வல்வை மாவட்ட வைத்தியசாலையில் இரத்ததான முகாம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை காலை 9 மணிக்கு இந்த முகாம் இடம் பெறவுள்ளது.

தன்னார்வக் குருதிக் கொடையாளர் இதில் இரத்ததானம் செய்ய முடியும். (203-70)

## சமயதீட்சை நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.10

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சமயதீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு கும்பபூசையுடன் விளக்கீட்டு உற்சவம் ஆரம்பமாகி இடம் பெறும். (203)


## நெல்லியடியில் வாழும் கலைப்பயிற்சி

கரவெட்டி,டிசெ.10

இலவச வாழும் கலைப்பயிற்சிகள் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் நெல்லியடி தடங்கண் புளியடி முருகன் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

பிராணாயாமம், பாஸ்கிரிகா, சுதர்ஸன கிரியா போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (203-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலய முன்றலில் காணப்படும் நூற்றாண்டு பழைமை வாய்ந்த இந்த நாவல் விருட்சம் கடந்த 12 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட கடுங்காற்று, மழையின்போது வேருடன் நிலத்தில் சாய்ந்தது. அதனை வெட்டி அகற்றாது அப்படியே பராமரித்ததன் விளைவாக நிலத்தில் சாய்ந்த நிலையிலேயே கிளைகள் பரப்பி பரந்து விரிந்து மீண்டும் பெரு விருட்சமாகி இப்போது எந்தப் புயல், காற்றினையும் தாங்கக்கூடிய நிலையில் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தினமும் நிழல்பரப்பி நிற்கின்றது இந்த நாவல் மரம். இதேபோன்று ''நிஷா''வின்போது சாய்ந்த பெருவிருட்சங்களில் மக்களின் வாழ்வியலுக்கு இடையூறாக உள்ளவற்றை மட்டும் அகற்றி, ஏனையவற்றை சாய்ந்த நிலையிலேயே பராமரித்து இதுபோன்று நிழல்தரு விருட்சமாக மாற்ற முயல்வோமாக.

(படமும் தகவலும் -டர்ஷிகன்)

தொகுப்பு: ஔண்யன்

# வண்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்



நன்றி :நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

மேலேயிருப்பது ஓவிய வித்தியாசிரியராக இருந்து ஓய்வுபெற்ற ஓவியர் க.இராஜரத்தினம் (1927 - 2005) அவர்களால் வரையப்பட்ட மெய்யுரு (Portrait) ஓவியங்களுள் ஒன்றாகும். யாழ்ப்பாணத்து ஓவியர்களில் மெய்யுரு வரைதலில் தனிச்சிறப்புத் தேர்ச்சிகாட்டிய இராஜரத்தினம் அவர்கள் 1948 - 1950 காலப்பகுதியில் இந்தியாவின் பிரபலமான ஓவியரும் - சிற்பியுமான றோய் சௌத்திரியின் கீழ் அப்போது இயங்கிய சென்னை அரசு கலை மற்றும் கைவினைகள் கல்லூரியில் பயின்றவர். ஒருவகையில் சென்னை அரசு கலை மற்றும் கைவினைகள் கல்லூரியின் நீட்சிகளுள் ஒருவரான அவர், 1938 இல் ஓவியர் எஸ்.ஆர்.கேயால் தொடங்கப்பெற்ற 'வின்சர் கலைக்கழகத்திலும்' பணியாற்றியுள்ளார்.

-பாலன்குட்டி.




நன்றி என்ற சொல்லைக்கேட்ட உடனேயே நமக்கு ஞாபகத்தில் வருவது நாய்தான். இங்கு தன்னுடைய செல்லப்பிராணியான நாயை, வெள்ளத்தில் கைவிட்டுச் செல்லாமல் தன்னுடனேயே அழைத்துச் செல்கிறார் இந்த இளைஞர். நன்றியுள்ள நாய்க்கே மனிதனின் நன்றி மறவாமையைப் புரியவைத்த இந்தக்காட்சி அண்மையில் ஏற்பட்ட பெருமழையின் போது 'க்ளிக்' செய்யப்பட்டது. பெருமழையால் நாய்கள் உட்பட ஏராளமான விலங்குகள் குளிராலும், வெள்ளத்தில் மூழ்கியும் இறந்தமை குறிப்பிடத்தக்கது.

(படமும் தகவலும் :-நேசன்)




வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் அமைந்துள்ள புனித தீர்த்தக் கேணியின் தோற்றமே இது. இக்கேணி செல்வச் சந்நிதியான் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலேயே வெட்டப்பட்டதாக வரலாறுகள் சொல்கின்றன. சந்நிதி முருகனின் தீர்த்தோற்சவத்தைத் தொடர்ந்து அன்றைய தினம் பக்தர்கள் அனைவரும் இப்புனிதத் தீர்த்தக்கேணியில் முருகன் நீராடிய புனித நீரை கொள்கலன்களில் தமது வீட்டுக்கு எடுத்துச் செல்வது வழமையாகும்.

(படமும் தகவலும் :-கலைஞன்)



அவுஸ்திரேலியாவிலுள்ள 'ரெஸ்மனியா' என்னும் இடத்தில் உள்ள 'டொம்புறோவ்கிஸ்' என்ற நதிகளின் சங்கமமே இது. வழமையாக இருநதிகள் எதிரெதிர்த் திசைகளில் இணைந்து கொண்டாலே பெரும் நீர்ச்சுழி தோன்றும். இங்கே ஒன்றுக்கொன்று எதிர்த்திசை நீரோட்டத்தைக் கொண்ட நான்கு நதிகள் சங்கமித்துள்ளன. அதனால் இப்பகுதியில் உள்ள சுழிகளில் சிக்கினால் மரணம் நிச்சயம். உலகிலுள்ள மிக அபாயகரமான இடங்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# நல்ல நூல்: வழிகாட்டும் குரு

நவீன யுக விஞ்ஞான விருத்தியின் விளைவால் நூல்கள் அச்சிடும் துறையில் அதிக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆகவே நூல்கள் பல்லாயிரக்கணக்கில் பல்வேறு துறைகளில், வெவ்வேறு மொழிகளில் வெளியிடப்பட்டு வருகின்றன. ஒரு நல்ல நூலானது நமக்கெல்லாம் வழிகாட்டும் குருவாக, அறிவூட்டும் ஆசானாக, அன்புடன் பழகும் நண்பனாக, வைத்தியனாக, விஞ்ஞானியாக வேறு எத்தனையோ விதமாக உதவி வருகின்றது.

ஆசிரியர் பாடத்தைப் படிப்பித்துக் கொண்டிருக்கும் போது, நமக்கு மனக்களைப்பு ஏற்படலாம். அப்போது பாடத்தை நிறுத்துமாறு நாம் அவரிடம் கேட்கமுடியாது. ஆனால் ஒரு நூலை நாம் வாசித்துக் கொண்டிருக்கும்போது அலுப்பு ஏற்பட்டால் அதனை மூடி வைத்துவிட்டு, நமக்கு விருப்பமான நேரத்தில் திரும்பவும் திறந்து வாசித்துக் கொள்ளலாம். ஆகவே ஒரு நூலை சாந்தகுணமுள்ள "ஆசிரியன்" என்று அழைப்பதில் தவறிருக்க முடியாது. நகர்ப்புறமோ, நாட்டுப்புறமோ என்று கருதாது வீடு தேடி, நம்மை நாடிவந்து அறிவூட்டும் ஆசிரியரை நாம் அலட்சியம் செய்தல் தகாது.

வாழ்க்கை முறையை அடுத்த தலைமுறைக்கு எடுத்துக் காட்டுவதில் நூல்கள் பெரும் பங்காற்றுகின்றன. சங்கப் புலவர்களின் அரும்பெரும் பாடல்களையெல்லாம் நூல் வடிவில் அமைக்காவிட்டால் இன்று அவை நம் கைகளுக்கு எட்டாக் கனிகளாகிக் கெட்டொழிந்திருக்கு மன்றோ!


மனித சமுதாயத்தின் மணிவிளக்காகத் திகழ்ந்த சமயப்பெரியார்கள், அடிமைத்தனத்தை அகற்றிய ஆபிரகாம்லிங்கன், மனித மாணிக்கமான மகாத்மா காந்தி போன்றோர் மடிந்து பல ஆண்டுகளாயினும் அவர்கள் நூல்கள் மூலமாக நம்முடன் வாழ்ந்து நமக்கு வழிகாட்டுகின்றனர்.

"ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற குறிக்கோளுடன் வாழ்ந்த மனிதர்களிடையே மொழிவாரியான பிரிவுகளும், பிளவுகளும் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான மொழிப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒருவர் அயலவரது மொழியைப் படித்து அறியவேண்டியது அவசியமாகின்றது. பல மொழிப்பயிற்சி நூல்கள் இதற்கு ஊக்கம் அளித்து வருவது போற்றத்தக்கதாகும்.

சில நூல்கள் நமது வாழ்வை நல்ல முறையில் அமைத்துக்கொள்ள ஊன்றுகோலாகப் பரிணமிக்கின்றன. திருக்குறள், திருவாசகம் போன்ற நூல்கள் நமது வாழ்க்கையில் திருப்பங்கள் ஏற்படுத்தும்தன்மை வாய்ந்தவை. "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்ற கூற்று திருவாசகத்தின் செல்வாக்கை எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறாகக் கல்லான இதயத்தைக் கனிவுள்ளதாக மாற்றும் தன்மை பல நூல்களுக்கு இருக்கத்தான் செய்கின்றது. மனிதன் இற்றைவரை நூல்களினால் பெற்ற பயன்களைச் சொல்ல வாழ்நாளே போதாது. ★

க.கல்பனா,
கொடிகாமம்.




# காற்றே நீ வழிமாறியதேனோ?

என்றைக்குமே
மந்த மாருதம்
வீசும் தென்றலாய்
எமைத் தாலாட்டும்
நீ......
அன்றைக்கு மட்டும்
ஏனோ?
அப்படியில்லை......
*   *   *
உன்
வரவின்
கணங்களுக்குள்
ரணமாகிப் போனது
மனதின்
சலனங்கள்
*   *   *
நீயும்
உன் சுபாவமும்
இப்படித்தான்
என்றிருந்தோம்
*   *   *
எப்படித்தான்
அனர்த்தங்களை
எம் வாசல்வரை
உன்னால்........
அள்ளிவர முடிந்தது?
*   *   *
உன்னில்
ஜீவிக்கும்
எம் சுவாசமே
சகவாசமாகி......
போனதால்
எப்படி
உன்னை
நாம் நிந்திப்பது?
*   *   *
வருணபகவான்
வழித்துணையாக
நீ....வாரிச் சுருட்டிய
வாழ்விடங்கள்தான்
எத்தனை......எத்தனை?
*   *   *
வான் பயிர்கள்
வயல் நிலங்கள்
உயிர் வாழினங்கள்
வகையற்று தொகையற்று
உருக்குலைந்து போயின......
உன் சல்லாபப் பிடியில்
*   *   *
வக்கற்றுப் போன வாழ்வு
திக்கற்றுப் போனதால்
திரும்பும் திசையெங்கும்
உன்
கோரச் சுவடுகள்
*   *   *
"நிஷா"ப் பெண்ணே......
நீ! விட்டுச்சென்ற
அவலத்தின் சுவடுகளில்
நாம் மீண்டும்
பயணிக்கின்றோம்
தொலைந்துபோன எம்
வாழ்வாதாரங்களைத் தேடி!

க.நாகேஸ்வரசு,
சண்டிலிப்பாய்.

# சனியின் சந்திரன்களில் திரவம்



சனிக் கிரகத்தின் சந்திரன்களில் திரவம் இருப்பதற்கான புதிய சான்றுகள் தமக்குக் கிடைத்துள்ளதாக விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்களது ஆராய்ச்சி முடிவுகள் "நேச்சர்" விஞ்ஞான இணையத்தளத்தில் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டுள்ளன. நாசாவின் கஸினி விண்கலத்தின் மூலம் பெறப்பட்ட சனியின் "என் செலாட்ஸ்" சந்திரனின் பிரதிமைகள் மூலம், சந்திரனின் மேற்பரப்பில் நீராவித்தன்மையுடைய வாயுக்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சந்திரனில் காணப்படும் இந்த நீராவி மூலக் கூறுகள், சனியின் சந்திரனில் திரவ நீரும் பனிப்படிவுகளும் இருப்பதற்குச் சான்றாக உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இளமையில் வறுமை கொடுமை மட்டுமல்ல மூளையின் செயற்றிறனையும் பாதிக்கின்றது

அமெரிக்காவில் வசதி படைத்த சூழலில் வளரும் மற்றும் வறுமைச் சூழலில் வளரும் குழந்தைகளிடத்தே நடத்தப்பட்ட ஆய்வில் இருந்து வறுமைச் சூழலில் நிலவும் அழுத்தங்கள் மத்தியில் வளரும் குழந்தைகளின் மூளைச் செயற்பாடு வசதி படைத்த சூழலில் வளரும் குழந்தைகளின் மூளைச் செயற்பாட்டில் இருந்து வேறுபட்டிருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.



வறுமைச் சூழலில் வளரும் பிள்ளைகளின் மூளையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடும் பகுதியில் மின் கணத்தாக்கச் செயற்பாடுகளில் வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மூளையின் 'Prefrontal Cortex' பகுதியில் செயற்பாடு மந்தமாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் பரிசோதனையின் போது சிலவகை பார்வைத் தூண்டல்களை இனங்காணவோ அல்லது அவற்றைப் பெற்றுக் கொண்டதன் பின்னான செயற்பாட்டைக் காட்டவோ இல்லை என்றும் அது மட்டுமன்றி 'Prefrontal Cartex' பகுதியால் வழங்கப்படும் மேலதிக உத்வேகத் தன்மையும் குறைவாகக் காணப்படுகின்றது என்றும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். அதேவேளை முன்னொரு ஆய்வில் வறுமைச் சூழலில் வளரும் பிள்ளைகள் மற்றவர்களைக் காட்டிலும் குறைவாகப் பேசுவதாகவும் கண்டறிந்துள்ளனர்.



இதற்காக வறுமைச் சூழலில் வாழும் பெற்றோரைக் குறைகூற முடியாது என்று கூறும் ஆய்வாளர்கள் இந்த ஆய்வு முடிவுகள் குழந்தைகள் எதிர்காலத்தில் எவ்வாறான சூழலில் வளர்க்கப்பட வேண்டும் என்ற அவசியத்தை எடுத்துரைக்கின்றன.

அதற் கேற்ற வகையில் குழந்தை வளர்ப்புத் திட்டங்களையும் வகுக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். குழந்தைகள் வறுமைச் சூழலில் வாழ்வதால் அவர்கள் பெற்றுக்கொள்ளும் தகவல் தூண்டல்களின் அளவு குறைந்திருப்பதும், அழுத்தங்கள் மத்தியில் வாழ்வதால் மூளை முற்றான அபிவிருத்தியைக் காட்டத் தவறுவதுமே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றைத் தவிர்க்கும் வகையில் எதிர்காலத்தில் குழந்தைகளுக்குரிய சரியான வளர்ப்புச் சூழலைத் தீர்மானிக்க வேண்டியதுடன் வறுமைச் சூழலில் வளரும் குழந்தைகளுக்குச் சரியான பயிற்சிகளும் அளிக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கின்றனர் ஆய்வாளர்கள்.

இதைத்தான் தமிழ் புலவர் ஔவையார் 'இளமையில் வறுமை கொடுமை' என்று [illegible] சொல்லி விட்டாரோ....!★

பி.சுபோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடிப் பெற்ற மனித உரிமைகள் இப்போது வெறும் வார்த்தைகளில் மட்டுமே வாழ்கின்றன

மனிதன் இப்பூமியில் பிறந்த காலத்திலிருந்து அவனுக்கும், அவன்சார் சமுதாயத்திற்கும் பொதுவான சில அடிப்படை உரிமைகள் உரித்தானவை என்ற மேலோட்ட எண்ணங்களே இன்றைய மனித உரிமைக்கான சிந்தனைகளை பல விதமாக விளைவித்தது. மனித உரிமைகளின் வளர்ச்சி நிலைமைகள் மனித சமுதாய வளர்ச்சியின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது. ஆரம்பநிலையில் மனிதன் கூட்டாகவே வாழ்ந்து வந்தான். இதனால் இயன்றவரை பிறர் நலன்களுக்கு ஊறுவிளைவிக்காது இசைந்து வாழும் இயல்புகளைக் கற்றுக் கொண்டான். இவ்வாறு சமுதாய அமைப்பு கட்டியெழுப்பப்பட கடமைகளும் உரிமைகளும் அவனுக்கு உரித்தாகத் தொடங்கின. இவை காலப்போக்கில் சமூக நடத்தைக் கோட்பாடுகளாக உருவாக்கப்பட்டு மதிக்கப்பட்ட நிலையில் அந்தந்த சமுதாயங்களில் உரிமைகளாக பரிணாமத்தைப் பெறத் தொடங்கின.

இயல்பான சுதந்திரத்தோடுதான் வாழவும், தான் இசைந்து வாழும் சமுதா

**இன்று மனித உரிமைகள் தினம்**

யத்திற்கான கடமைகளை முழுமையாக ஆற்றவும் மனிதன் முற்படும் வேளைகளில் விழையும் உரிமைகள் மறுக்கப்படும்போதே அளிக்கப்பட்டு வந்த உரிமைகள் தடைசெய்யப்பட்டாலோ மனித சமுதாயம் அப்படிப்பட்ட நிலைமைகளை பொறுத்துக் கொள்வதில்லை. இதனால் தனது சமுதாயத்தின் மேல் கேள்விக் கணைகளைத் தொடுத்தான். இவையோ தனிமனித உரிமைகளின் மூலவிதைகளாகும். தனி மனிதன் மேல் எழுப்பும் கேள்விகளை சமுதாயம் அங்கீகரித்து இடமளிக்கும்போதுதான் அவனது உரிமைகள் உறுதியளிக்கப்படுகின்றன. அத்தகைய உரிமைகள் "மனித உரிமைகள் எனும் தொகுப்பில்வந்துசேர்கின்றன.காலம்தோறும் சமுதாயம் வளர்ச்சி நிலைகளுக்கேற்ப சமுதாய அங்கீகரிப்புக்களங்களும் விரிவடைகின்றன". ஆகவேதான் "மனித உரிமைகள்" என்பவை இவை இவை என வரையறுத்து பட்டியற்படுத்துவது கடினமாகவுள்ளது. காலச் சூழல்களால் அவை விளைவிக்கும் தேவைகள் மனித உரிமைகளின் வடிவங்களை மாற்றுவது இயற்கையே! அவ்வப்போது பிறக்கும் புதிய உரிமைகளும் அங்கீகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மனித உரிமைக்கான வரலாற்றுச் சுவடுகளை நோக்குவோமானால் உரிமைகள் வழங்கப்படுவதில் ஒரு சில குறைபாடுகள் இருந்தாலும் கூட மனித உரிமைகள் குறித்த சிந்தனைகள் பழம்காலம் முதலே அவ்வப்போது வெளிப்பட்டு வந்துள்ளன. இன்று சட்டத்தின் புதிய தந்தை எனப்படும் டச் நாட்டைச் சேர்ந்த(17 ஆம் நூற்றாண்டு) "ஹியூகோ குரோட்டிஸ்" என்பவரது நூல்களில் உரிமைகளின் கோட்பாடுகள் சிற்றொளிக் கீற்றுக்கள் ஆங்காங்கு சிதறிக்கிடக்கின்றன. மனித உரிமைகளின் மைல்கல்லாகக் காணப்படும் சில புரட்சிகளும் பிரகடனங்களும்:

★முதன் முதலாக 1188 இல் 9 ஆம் மன்னர் அல்போன்ஸாவால் மக்களுக்கு சுதந்திர வாழ்வுரிமை அளிக்கப்பட்டது.

★மனித உரிமைகளின் எழுச்சிக் கீதமாக விளங்கிய மிக முக்கிய மைல் கல், இங்கிலாந்து மன்னரின் ஜான் ஆட்சிக் காலத்தில் 1215 இல் பிறந்த "மாக்ன கார்ட்டா" எனும் மனித உரிமைகள் சாசனம்.

★1222 - ஹங்கேரி மனித உரிமைகள் பிரகடனம்.

★1689 - இங்கிலாந்து - உரிமைகள் சட்டம்.

★1776 - அமெரிக்க - விடுதலைப் பிரகடனம்.

★1789 -பிரான்ஸ்- பிரெஞ்சுப் புரட்சி - மனித உரிமைப் பிரகடனம்.

★1864 - ஜெனிவாப் பிரகடனம்.

★1919 - இங்கிலாந்து -மகளிர்க்கு வாக்குரிமை.

★1945 - ஐ.நா. அமைப்புச் சாசனம்.

★1948 -ஐ.நா. உலக மனித உரிமைகள் பிரகடனம்.

★1953 - ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றம் அமைப்பு.

★1966 - ஐ.நா. குடியுரிமை அரசியல் உரிமைக் கோட்பாடு சமூகபொருளாதார அரசியல் உரிமைக் கோட்பாடு.

★1975 -ஐ.நா. உலக மகளிர் ஆண்டு பிரகடனம்.

★1986 -ஐ.நா அமைதிக்கு உரிமை தீர்மானம்.

இவ் எழுச்சிகளும், பிரகடனங்களும் சமுதாய மனித உரிமை விடுதலைக்கான உந்து சக்தியை வழங்குவனவாக அமைந்தவை.

2 ஆம் உலகப் போரில் புதையுண்டு உயிரற்ற தறுவாயில் உள்ள மனிதத்தைப் பாதுகாக்க, கைதிகளுக்கான வன்முறையில் உச்சக்கட்டத்திலிருந்து அவர்களைப் பாதுகாக்க 1864 இல் ஜெனிவா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. போர்க் கைதிகளுக்கு மருந்து வசதி கொடுத்து பாதுகாத்து அவரவர் நாட்டிற்கு உரிய பாதுகாப்பில் அனுப்பப்பட வேண்டும் என நிபந்தனைகளை இந்த ஒப்பந்தம் உள்ளடக்கியது. போர்க்கைதிகளுக்கு மனிதாபிமான உதவி அளிக்க சுவிட்ஸலாந்து இரு மனிதர்களின் முயற்சியே உலகளாவிய செஞ்சிலுவைச் சங்கம். இதுவும் மனித உரிமையின் ஒரு வெற்றித் தூண்தான்.

மனித உரிமைகளின் பாதுகாப்பில் ஐக்கிய நாடுகளின் பங்களிப்பை எடுத்து நோக்குவோமானால் அமெரிக்காவில் சான் பிரஸ்கோ நகரில் 25 ஏப்ரல் 1945 நடைபெற்ற மாநாட்டில் 50 நாடுகளின் பங்கேற்பில் ஐ.நா அமைப்புச் சாசனம் கையெழுத்திடப்பட்டது. ஐ.நா அமைப்புத்தான் "மனித உரிமைகளின் காவலராக விளங்குகிறது என்பதில் ஐயம் இல்லை". மனித உரிமைகள் கமிஷனால் 10ஆம் திகதி டிசெம்பர் 1948இல் உலக மனித உரிமைகள் சாசனம் மட்டும்தான் வெளியிடப்பட்டது. அதன் பின் இரு பகுதிகளாக 16 டிசெம்பர் 1966 இல், 3 ஜனவரி 1976 முதல் அமுலுக்கு வந்த குடியுரிமைகள் அரசியல் உரிமைகள் குறித்த பன்னாட்டு உடன்பாடு, சமூகப் பொருளாதார பன்னாட்டு உடன்பாடும் வெளிவந்தன.

சட்டம் மனிதர்களது எந்த நலனை ஏற்றுப் பாதுகாக்கிறதோ அந்த நலன்கள் தான் உரிமைகள் ஆகின்றன. ஆகவே தம் உரிமைகள் சட்டபூர்வமாக்கப்பட வேண்டும் என்ற கேள்வி அரசை நோக்கி எழுப்பப்பட்டது. சட்டபூர்வமாக்கினால் போதாது. நடைமுறைப் படுத்தக் கூடியனவாக இருக்க வேண்டும். இலங்கை அரசியலமைப்பு மனித உரிமைகள் பற்றி கூறுவன இவை தான். 1978 ஆம் ஆண்டு முதல் அமுலிலுள்ள அடிப்படை உரிமைகள் வருமாறு:

மனிதனுக்குரிய அடிப்படை உரிமைகள் சட்டத்தால் பாதுகாக்கப்படுதல் வேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமன். சிறப்பேற்பாடுகளை உரியவர்களுக்கு உரிய முறையில் வழங்க வேண்டும், கைது செய்யப்படுபவர்கள் இலங்கை அரசியலமைப்பை பின் உறுப்புரை 13 கூறுவதுபடி செயற்படுத்த வேண்டும். உறுப்புரை 14 இலங்கை மக்களின் பிரஜைகளுக்கான உரிமைகளைக் குறிப்பிடுகிறது. இவ்வாறு உரிமைகளை வெறுமனே சொல்வதோடு மட்டுமல்லாது அவற்றைப் பாதுகாக்கவும் வேண்டும்.

இன்றைய கால கட்டத்தில் ஒவ்வொரு விடயத்திலும் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. மனிதம் சாலை ஓரச் சருகாகிறது. மனிதத்துடிப்பின் அலறல்கள் எங்கும் ஒலிக்கின்றன. சமவாயங்கள், பிரகடனங்கள் என்று அன்றைய மாநாடுகளில் பேச்சு வார்த்தைகளில் தலைதூக்கியவை இன்று நூல்களில் உறங்கிக் கொண்டிருக்கின்றன. எத்தனையோ மனித உரிமைகள் எப்படி எல்லாம் உயிர்பெற்றது. அன்றைய கல்வித் தலைவர்களின் சிந்தனைகளிலும், மேடை, மேசைப் பேச்சுக்களிலும் இன்று அவை அந்த நிமிடக்காற்றே அள்ளிப் போய்விட்டது. இன்று மனிதனை மனி தனாக மதிப்பதற்கு இடமே இல்லை. ஒவ்வொரு நிமிடமும் உரிமைகள் மீறப்பட்டுக் கொண்டிருக்கிறது. மனிதன் தனது உரிமைகளை உரிமையோடு கேட்கையில் உருவிக் கொள்கிறான் உயிரை! பிறகு ஏன் மனித உரிமைக்காக மைத்துளிகளில் எழுத்துக்கள்?

அகிம்சையால் போராடி எடுத்த உரிமைகளை இன்று மனிதத்தால் கூடி போராடி எடுக்க முடியவில்லை. காரணம் மனிதனுக்குள் ஊடுருவும் அரசியல் கலாசாரம், ஆயுதக் கலாசாரம் போன்றவைதான். அடிமைத்தனமும் அடக்கு முறைகளும் மனிதனை அடக்கலாம். மனிதத்தை அடக்க முடியாது. இவ்வுலகில் ஒரு மனிதன் வாழும் வரை மனிதம் போராடிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. மனித குல முயற்சிகள் முடியாது தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். மனித உரிமைகள் என்பவை உலகப் பொதுத்தன்மை

**செல்வி றொஷானி செந்தில்செல்வன்.**

உடையவை. மனிதர்களிடம் இருந்து ஒரு போதும் பிரிக்கமுடியாது. தற்போதைய அழிவுகளின் அபாயங்களில் இருந்து உலகைக்காத்து அமைதியும் மனிதனின் அடிப்படை உரிமைகளை இயல்பாக மதிக்கும் இலட்சியச் சூழலும் ஏற்படுத்தித் தரும் பொறுப்பும் இன் றைய தலைமுறைக்கிருந்தால் அது தனது செயல்களை அதற்கேற்ப அமைக்க வேண்டும். அமையும் என அனைவரும் எதிர்பார்ப்போம்.★

## போயா ஆன்மீக நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்.பகவான் ஸ்ரீசத்திய சாயிசேவா நிலையத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்குப் போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஓம்காரம், காயத்திரி மந்திர ஜெபம், வேதபாராயணம், நாம அருட்சனை, பஜனை, திருநீற்றுப்பதிகம், கோளறு பதிகம், சொற்பொழிவு ஆகியன இடம் பெறவுள்ளன. (201)


## நெடுந்தீவு பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

நெடுந்தீவு பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட பொதுச்சந்தை, இறைச்சிக்கடை ஆகியன 01.01.2009 தொடக்கம் 31.12.2009 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி: 18.12.2008 பிற்பகல் 3.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி: 19.12.2008 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி: 19.12.2008 பிற்பகல் 2.00 மணி

| இல. | குத்தகையின் வகை | சபைக்குச் செலுத்த வேண்டிய மாத வாடகை | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01. | நெடுந்தீவு மாட்டிறைச்சிக் கடை | 150.00/= | 60000/= | 2000/= | 500/= |
| 02. | நெடுந்தீவு பொதுச்சந்தை | - | 4000/= | 1500/= | 250/= |

01. கேள்விப்பத்திரம் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியைச் செயலாளர், நெடுந்தீவுப் பிரதேசசபை, நெடுந்தீவு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
02. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுனராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப் படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
03. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ செயலாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.
04. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
05. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் நெடுந்தீவு பிரதேசசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சோமலிங்கம் தம்பிராசா,
செயலாளர்,
நெடுந்தீவு பிரதேசசபை.

நெடுந்தீவு பிரதேச சபை,
நெடுந்தீவு .
(சி/555941)


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ
02.02.1987



கண் நெகிழ
01.12.1998

**செல்வி தேவசுதா வடிவேற்கரசு (நிதியா)**

திதி: கார்த்திகை பூர்வபக்க திரயோதசி
(10.12.2008)

பதிதனில் பொற்றெருத்தேன்
பதினோராண்டாய் வளர்ந்து நின்றேன்
விதி செய்த சதியால்- இங்கு
விழி நீர் தொடர்ந்தோட
ஆனதோ ஆண்டுகள் பத்து.

உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உனது அம்மா செல்வராணி வடிவேற்கரசு
(வைத்தீஸ்வரன்),
யாகேஸ்வரி செல்லையா-அம்மம்மா

"சித்தம்பாதி",
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

(சி/555942)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் எழுத்தியலின் எல்லாத் துறைகளிலும் தடம் பதித்து பிரகாசித்தவர் கலாநிதி சொக்கன்



எங்கள் காலக்குறு முனிவரும், இன்றைய தமிழ் உலகின் வசிட்டமா முனிவரும், பழைமைக்கும் புதுமைக்கும் உறுதிமிக்க இணைப்புப் பாலமாகத் திகழ்ந்தவரும், இலட்சிய மூச்சுடன் இலக்கியம் படைத்துக் காலத்துக்கும் சமூக மாற்றத்துக்கும் ஏற்பத் தம் சிந்தனையைப் பக்குவமாக்கி எழுத்தின் பல துறைகளிலும் பிரகாசித்த சொக்கன் ஐயா அவர்கள் தமிழ் இலக்கிய உலகில் தனித்துவமுடையவர். அவருடைய நடையிலே சிவ மணமும் தமிழ் மணமும் கமழ்வதைக் காணலாம்.

**சமய நூல்கள்**

சொக்கன் இந்துசமய நூல்களை எடுத்து நோக்கும்பொழுது அறிவு தெளிந்த நிலைமையில் எளிமைதானே கைவரும் என்பதற்கு இந்த நூல்கள் சிறந்த சான்றாக உள்ளன. நூலாசிரியரின் ஆழ்ந்த சமய அறிவும் இந்து நாகரிக அறிவும் தமிழ் அறிவும் கற்பித்தல் அனுபவ முதிர்ச்சியும் உளவியல் அறிவும் பிறவும் இந்நூல்களில் பளிச்சென்று தெரிகின்றன. வேதநெறி வேறு, சைவநெறி வேறு என்ற தடுமாற்றம் மாணவருக்கு ஏற்படாது இருக்கும் பொருட்டு ***'வேதநெறி தளைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க'*** என்ற பெரிய புராணத் திருவாக்கை எடுத்துக்காட்டி இந்த உண்மையை முதலில் மாணவர் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியவைக்க விளையும் நூலாசிரியர் ''எமது சமயத்தின் முதல் நூல்கள் வேதங்களும் ஆகமங்களும் ஆகும். வேதம் பொதுநூல் எனவும், ஆகமம் சிறப்பு நூல் எனவும் கொள்வது சைவ மரபு. வேதங்களை ஏற்றுக்கொண்ட காரணத்தினாலேயே எமது சைவசமயம வைதீகநெறி எனவும் வழங்கும்'' எனத் தெளிவாக உரைத்துள்ளார்.

## இன்று அவர் நினைவுதினம்

அடுத்து ''அறநெறிப்பா மஞ்சரி'' (1969) குறிப்பிடத்தக்கதொரு தொகுப்பு நூலாகும். இது வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கேற்ற அறநெறி சார்ந்த நன்மொழிகளைச் சங்க காலத்திலிருந்து இன்று வரை எழுந்த அறநெறிப் பாடல்களிலிருந்து தொகுத்துத் தருகின்றது. இந்நூல் கல்வி, வீரம், கடமை, நன்றி, ஒப்புரவு, அன்பு முதலான பண்புகளின் உயர்வு பற்றிக் கூறும் அரிய பாடல்கள் இதில் தொக்கப்பட்டுள்ளன.

சொக்கனின் ''பாரதி பாடிய பராசக்தி'' (1974) என்ற நூல் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்ட பல்துறை சார்ந்த கட்டுரைகளை உள்ளடக்கிய தொகுப்பு நூல். இதில் சாக்தநெறி பற்றியும், தமிழகத்திலே நிலவும் சக்தி வழிபாடு பற்றியும், பாரதியின் பராசக்திப் பாடல்கள் பற்றியும், அவரது பேரிலக்கியம் பற்றியும் சிறப்பாக எடுத்துக் கூறப்படுகின்றன.

**நல்லூர்க்கந்தன் மீதான பாடல்கள்**

நல்லூர்க்கந்தன் மீது பாடிய ''நல்லூர் நான்மணிமாலை''யும் (1966) நல்லூர்க் கந்தன் மீது இவர் பாடிய பாடல்களும், எழுதிய கட்டுரைகளும் இவர் ஒரு சிறந்த முருக பக்தர் என்பதைக் காட்டி நிற்கின்றன. ஈழநாட்டில் முருக வழிபாடு பற்றிய பல விவரங்களை இவை தருகின்றன. பக்திச்சுவை நிரம்பியது. இவரது ''நல்லூர் நான்மணிமாலை''. வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் ஆகிய பாவடிவங்களில் முருகன் பெருமையைப் பேசுகின்றார்.

தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானத்தில் 1981இல் நடைபெற்ற சென்னை சைவசித்தாந்த மகாசமாஜ சைவசித்தாந்த மகாநாட்டில் ''திருமந்திரம் காட்டும் வாழ்வு'' என்ற தலைப்பில் சொக்கன் ஆற்றிய உரையும் கட்டுரையாக வெளிவந்தது. திருமந்திரம் அனைவரது வாழ்விற்கும் காட்டும் பொது நெறியை ஆசிரியர் கோடிட்டுக் காட்டுகின்றார். யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஆதரவில் நடந்த சைவ மகாநாட்டுக் கவியரங்கில் ''அப்பரின் அன்புள்ளம்'' என்ற தலைப்பில் இவர் பாடிய கவிதைகள் நூலுருப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1968ஆம் ஆண்டு இவர் வெளியிட்ட ''நல்லை நகர் நாவலர்'' என்ற நூல் நாவலரது வரலாற்றினைச் சுவையும் பக்தியும் ததும்ப வெளிப்படுத்தியது எனலாம்.

**சிறுகதை இலக்கியம்**

சொக்கனின் சிறுகதைகளை எடுத்து நோக்கும்பொழுது பாடசாலை மாணவனாயிருந்தபோதே ''வள்ளி,'' குப்பையிலே மாணிக்கம்'' என்ற கதைகளை எழுதிய சிறுவனிடம் திறமையிருந்ததைப் பத்திரிகை ஆசிரியர்களும் சகபாடிகளும் கண்டு வாழ்த்தினார்கள். 1944ஆம் ஆண்டிலிருந்து அமரராகும்வரை சுமார் முந்நூறுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். அமரராகும்வரை புதிய இளமையுடன் எழுதிக் கொண்டிருந்த இவருடைய சிறுகதைகள் அரசியல், சமூகம், வரலாறு, இலக்கியம் முதலிய பல்வேறு துறைகளைச் சார்ந்தன. சொக்கனின் சிறுகதைகளில் இலக்கண வழுவற்ற செம்மை சார்ந்த தமிழில் பழந் தமிழர் பண்பாட்டினடியாக மானுட மேன்மை நோக்கையும் கலாவியக்தியையும் காண முடிகிறது.

**நாடகத்துறையில்**

நாடகத்துறையை எடுத்துநோக்கும்பொழுது நாடகம் முழுவதும் ஆசிரியரது இலக்கியப் பயிற்சியும் இசை இரசனையும் இழையோடுகின்றன. அவை கற்றோர்க்குப் பேருவகை தருவன. மற்றோர்க்கும் இன்பம் அளிப்பன. ''சிலம்பு பிறந்தது'' சிலப்பதிகாரக் கதையைத் தழுவியது. சிறந்த இலக்கிய நடையில் எழுதப்பட்ட இந்நாடகம் குறிப்பிடற்குரிய சில அம்சங்களுடன் விளங்குகின்றது.

சொக்கன் நாடக ஆசிரியர் மட்டுமன்றி நாடக ஆய்வாளராகவும் விளங்குகின்றார். ''ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சி'' என்னும் தலைப்பில் பேராசிரியர் சு.வித்தியானந்தனுடைய மேற்பார்வையிலே இவர் ஆய்வு மேற்கொண்டார். இவர் ஆய்வு செய்து சமர்ப்பித்த ஆய்வேட்டுக்குப் பேராதனைப் பல்கலைக்கழகம் முதுமாணிப் பட்டம் வழங்கியது.

கலாநிதி கந்தசாமிச் செட்டி சொக்கலிங்கம் தன்னை மறைத்து தமிழ் உலகிற்கு சொக்கன், ஆராவமுதன், அடியவன், வேனிலான், தேன், சுடலையூர்ச்சுந்தரன், பொய்யாம்மொழியார், சோனா, திரிபுராந்தகன், கன்றுக்குட்டி, ஈழத்துப்பேய்ச்சாத்தன், குறளன், ஞானம், ஜனனி, சாம்பவன், சட்டம்பியார், எதார்த்தன், பாலன் முதலிய புனைபெயர்களில் தமிழ் உலகிற்கு ஆற்றிய பணிகள் நன்றியோடு நினைவு கூரத்தக்கன.

**கிருஷ்ணசாமி கிருபானந்தா**
*செயலாளர்,*
*யாழ்.இலக்கியவட்டம்*

சிறுகதை எழுத்தாளராக, கவிஞராக, நாவலாசிரியராக, நாடக ஆசிரியராக, கட்டுரையாளராக, கல்வியாளராக, சமயநூல் எழுத்தாளராக, பேச்சாளராக, மொழிபெயர்ப்பாளராக, நடிகராக, நெறியாளராக, ஆசிரியராக, அதிபராக, பாடநூல் எழுத்தாளராக என்று அவர் தொடாத துறையுமில்லை. அவர் தொட்டுத் துலங்காத துறையுமில்லை. *

# அரியநேத்திரன் தடுக்கப்பட்டமை அரசியல் யாப்பை மீறும் செயல்

## சம்பந்தன் எம்.பி. சபையில் சீற்றம்

கொழும்பு,டிசெ.10

தனது நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்காக வெளிநாடு செல்லமுற்பட்ட எம்.பி. ஒருவரை வெளிநாடு செல்லவிடாமல் தடுத்தமை நாட்டின் அரசியல் யாப்பை வெளிப்படையாகவே மீறும் செயல் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் திங்களன்று நாடாளுமன்றில் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு :-

தனது நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்காகவே அரியநேத்திரன் எம்.பி. இந்தியா செல்ல முற்பட்டார். ஆனால், சி.ஐ.டியினர் அவரது பயணத்தைத் தடுத்துவிட்டனர்.

இவரின் பயணத்தைத் தடுப்பதற்கு நீதிமன்றம் இணங்காதபோதிலும் சி.ஐ.டியினர் தடுத்தமை மிகவும் பாரதூரமான ஒன்றாகும்.

எம்.பி. ஒருவர் தனது நோய்க்குச் சிகிச்சை பெற வெளிநாடு செல்வதற்குத் தடை விதிப்பது இந்த நாட்டின் சட்டதிட்டத்திற்கு முரணானதாகும். அரசியல் யாப்பையே மீறும் செயல்.

அரியநேத்திரன் எம்.பியின் பயணத்தைத் தடுப்பதன் மூலம் அவரின் நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது.

உறுப்பினர்களின் சிறப்புரிமைகளைப் பாதுகாக்கும் கடமையுடைய சபாநாயகர் இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறாமல் இருப்பதை சபாநாயகர் உறுதிப்படுத்தவேண்டும்.

2008 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்பின்போது எமது கட்சி எம்.பிக்களை இந்தச் சபையில் [illegible] விடாமல் தடுத்தமையும் குறிப்பிடத்தக்கது. - என்றார். (சி)

## வீதிகள் சேதம்

குருநகர்,டிசெ.10

யாழ்ப்பாணத்தில் அண்மையில் பெய்த பெரு மழை காரணமாக வெள்ளம் தேங்கி நின்றதனால் பல வீதிகள் சேதமடைந்து காணப்படுகின்றன.

குருநகர் பகுதியிலும் மழை வெள்ளத்தினால் வீதிகளில் உள்ள கற்கள் கிளம்பி வீதிகளில் பள்ளம் தோன்றியுள்ளது.

குருநகர் தண்ணீர்த்தாங்கி வீதி, சென். ஜேம்ஸ் மகாவித்தியாலய வீதி, தண்ணீர் தாங்கி குறுக்கு வீதிகள் யாவும் சேதமடைந்து காணப்படுகின்றன. (203-51)

# வாசகர் திருமுகம்

## தாரதம்மியம் பார்த்துப் புயல் வீசவில்லை நிவாரணமும் அவ்வாறே அமையுமா?

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பாக வீசிய ''நிஷா'' புயல் காற்று மற்றும் கடும் மழை காரணமாக நடைபெற்ற இயற்கை அனர்த்தம் மூலம் யாழ்.குடாநாடே வெள்ளக் காடாக மாறி, பலரது உயிர்களைப் பறித்து, பல கோடி ரூபாக்களை நட்டமடையச் செய்த 'நிஷா' மறைந்துவிட்டது.

வீடுகள், கட்டடங்கள், வணக்கத்தலங்கள், பாடசாலைகள், கடைகள் என்று அனைத்துமேயில்லாத அழிவைக் கண்டன. விளைபயிர்கள், விருட்சங்கள், பழ மரங்கள் என்று நூறு வருட வயதுடைய மரங்களையே 'நிஷா' விட்டுவைக்காமல் அழித்து சுடுகாடாக மாற்றியுள்ளது.

இத்தகைய அழிவுகளுக்குரிய பதிவுகளை மேற்கொள்வதற்கு கிராம அலுவலர்களின் அலுவலகத்தை முற்றுகையிடும் பொதுமக்களது அவலங்களை நேரில் காணக்கூடியதாகவும் உள்ளது. இதில் வேடிக்கை என்னவென்றால் ''நிஷா'' புயல் வீசி அழித்தபோது ஏழை, பணக்காரன், உள்ளவன், இல்லாதவன், ''அ'', ''இ'' அட்டையுடையோர், ''உ'' அட்டை உடையோர் என்று பார்த்து அழிக்கவில்லை. அனைவரையும் சமனாக மதித்தே 'நிஷா' தன் கொடூரத்தை நிகழ்த்தி உள்ளது.

ஆனால் இதற்குரிய பதிவுகளை மேற்கொள்ளும்போது ''உ'' அட்டை உடைய உத்தியோகத்தர்களது பதிவுகள் கவனத்தில் எடுக்கப்படுமா என்று தெரியாதவர்களாக உள்ளோம், அழிவுகளும் இழப்புகளும் அனைவருக்கும் பொதுவானது - கடந்த காலங்களிலும் ஏன் யுத்தத்தின் பாதிப்புகளுக்கே ''உ'' அட்டை உடையவர்களுக்கு (உதவாத அட்டை என்று இதற்குப் பெயர்) எதுவும் வழங்கப்படவில்லை.

இது இவ்வாறிருக்க 'நிஷா'வின் கொடுமையும் ''உ'' அட்டை உடையவர்களை கொடுமைப்படுத்தியுள்ளது ''உ'' அட்டை உடையவர்களின் அழிவு சேதங்களை யாரும் கணக்கிடமாட்டீர்களா?

மாதம் ஐயாயிரம் சம்பளம் பெறுபவருக்கும், மாதம் ஐம்பதாயிரம் சம்பளம் எடுக்கும் உயர்நிலையில் உள்ளவர்களுக்கும் ''உ'' அட்டை என்று ஓர் ஒன்றுக்குமே உதவாத அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதில் சுருங்கச் சொன்னால் இன்றைய விலைவாசிகளுக்கு முகம் கொடுக்கவே முடியாமல் ஒவ்வோர் அரச ஊழியரும் பிச்சைக்காரர்களாகவே உள்ளனர். எடுக்கும் சம்பளம் சாப்பாட்டுக்கே போதாமல் இருக்கும்போது அழிவுகளைத் திரும்பவும் செப்பனிட அரச ஊழியர்கள் எங்கே போவது?

எனவே கடந்த காலங்களைப்போல இம்முறையும் ''உ'' அட்டை உடையவர்களை அவலத்தில் விடாமல் 'நிஷா'வின் கொடுமைக்காவது பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நட்ட ஈடு கிடைக்க ஆவன செய்யுமாறு உரிய அதிகாரிகளைப் பணிவோடு வேண்டிக்கொள்கின்றோம்.

*அளவெட்டி வடக்கு.* *பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள் சார்பில் ப.உதயகுமார்.*

## யாரை எங்கே நியமிப்பது; பொருத்தம் வேண்டாமா?

பாடசாலைகளிலே ஆசிரிய நியமனங்கள் நடைபெற்று வருகின்றன. ஆசிரியர்களில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பயிற்றப்படாத ஆசிரியர்கள் என 2 பிரிவு உண்டு. பயிற்றப்பட்டவர்களில் ஆரம்பக்கல்விக்கென்று பயிற்சி பெற்றவர்கள் மற்றும் ஒரு குறிப்பிட்ட பாடத்திற்கென்று பயிற்சி பெற்றவர்கள், இவைதவிர பட்டதாரி, டிப்ளோமாதாரிகள் எனப் பலரும் அடங்குவர். தற்போதைய காலங்களில் பட்டதாரி ஆசிரியர்கள் ஆரம்பக் கல்வியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இது ஓர் ஆரோக்கியமான நிலைமை அல்ல. உதாரணமாகப் பொருளியில் சிறப்புப் பட்டம் பெற்ற ஓர் ஆசிரியர் டிப்ளோமா பயிற்சியும் பெற்ற பின்னர் ஆரம்பக் கல்வியில் நியமிக்கப்படுகின்றார். ஆரம்பக்கல்வி என்பது ஒரு மனிதனுக்கு அத்திவாரம் இடப்படுகின்ற இடமாகும். இந்த ஆரம்பக்கல்வியில் கற்பிப்பவர்கள் சிறந்த கற்பித்தற் பயிற்சி பெற்றவர்களாக இருக்கவேண்டும். இவ்வாறிருக்க ஆரம்பக்கல்விக்கென்று எந்தவொரு பயிற்சியுமில்லாத பட்டதாரிகள் ஆரம்பக் கல்வியிற் போய் சாதிப்பதுதான் என்ன? உரியவர்களை உரிய இடத்தில் நியமித்தால் கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரோக்கியமாக அமையும். மாணவர்களின் எதிர்காலமும் சிறப்பாக அமையும். பட்டதாரி டிப்ளோமாதாரிகளின் கல்வியும் பயிற்சியும் பயனுடையதாகவும் அமையும். இது பொருத்தமானவர்களுக்குச் சமர்ப்பணம்.

*நல்லூர்.* சி.ஜோதிகா.

## செலுத்திய மின்கட்டணம் ஏன் வரவு வைக்கப்படவில்லை?

நான் தொடர்ந்து பல வருடங்களாக எனது மின்பட்டியல் இலக்கம் 1699106606இன் மாதாந்த விதிப்பனவுச் சிட்டை கிடைத்ததும், சங்குவேலி உப அஞ்சலகத்தில் உரிய மின்கட்டணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று வருகின்றேன்.

இதுவரை சிட்டையில் நிலுவை ஏதும் வைக்காமல், மாதாந்தம் கிடைக்கும் குறிப்பிட்ட விதிப்பனவுப்படி மின்கட்டணப் பணத்தைச் செலுத்தி வந்துள்ளேன்.

2006ஆம் ஆண்டு ஆவணி மாத மின்கட்டண விதிப்பனவுப்படி ரூபா 312 சதம் 57இற்கு உரிய கட்டணமாக 313 ரூபாவை 15.09.2006 அன்று சங்குவேலி உப அஞ்சலகத்தில் செலுத்தி **EB/68 416021**ஆம் இலக்கப் பற்றுச்சீட்டைப் பெற்றேன்.

2007ஆம் ஆண்டு மாசி மாத விதிப்பனவுச் சிட்டையின் படி ரூபா 211, சதம் 20இற்குப் பதிலாக அஞ்சலகத்தில் 212 ரூபாவை 16.06.2007 அன்று செலுத்தி **EB/69 497676**ஆம் இலக்கப் பற்றுச்சீட்டைப் பெற்றுள்ளேன்.

நான் இதுவரை மின்சார சபைக்குச் செலுத்திய 525 ரூபா மின்கட்டணம் எனது மாதாந்த விதிப்பனவுப் பட்டியல் எதிலும் பெற்றுக்கொண்டதாக வரவு வைக்கப்படவில்லை.

ஆகவே அஞ்சலகம் மூலம் நான் மின்சாரசபைக்குச் செலுத்திய 525 ரூபா எங்கே போனது? நான் மின்கட்டணம் செலுத்தியமைக்கான ஆதாரம் இருக்கவேண்டுமல்லவா? உரியவர்கள் விளக்கம் தருவார்களா?

*சங்குவேலி* *மின்பாவனையாளர் அ.அரசகுலசேகரன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணசேவை

...டம் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உண்டு. புகைப்படம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பதிவுக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. பழைய பதிவினரும் மீண்டும் தொடர்பு கொள்ளவும்.

துர்க்கா திருமணசேவை,
இல.9, சங்கிலியன் வீதி, நல்லூர்.
தொ.பே:0214591417
(80587)


## சைக்கிள் கண்டெடுக்கப்பட்டது

7.12.2008 இல் ஆடியபாதம் வீதியால் சென்ற லொறியில் மேல் இருந்த சைக்கிள் கீழே விழுந்து 331, ஆடியபாதம் வீதியில் வைக்கப்பட்டுள்ளது. சரியான தகவல்களைக் கொடுத்து உரிமையாளரைப் பெறறுச் செல்லும்படி கேட்கப்படுகின்றது.

இல.331, ஆடியபாதம் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
## 2009ஆம் ஆண்டுக்கான
## பொருள்கள் சேவைகள் வழங்குனர்களை பதிவு செய்தல்

யாழ்.போதனா வைத்தியசாலையில் 2009ஆம் ஆண்டில் பொருள்கள், சேவைகள், வழக்குனர்களையும் பதிவு செய்வதற்கு ... பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், விற்பனை முகவர்கள், அரச நிறுவனங்கள், அரச சபைகள், பதிவு செய்யப்பட்ட வியாபார ஸ்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை பணிப்பாளர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15.01.2009 அன்று மு.ப. 10மணிக்கு அல்லது அதற்கு முன்பதாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும்
குறியீடு (A) பொருள்கள் வழங்குதல்
குறியீடு (B) சேவை வழங்குதல்
குறியீடு (C) வாகனச் சுத்திகரிப்பு
வாகனத்திருத்தம் என்பவற்றில் கீழ்வரும் ஒவ்வொரு வகையானவற்றிற்கும் தனித்தனியான ஒவ்வொன்றுக்கும் ரூ. 100/= வீதம் எமது அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று எம்மால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.

பொருள்கள், சேவைகள் வழங்குனர்கள் ஒருமாத கால கடன் அடிப்படையில் பொருள்களையும் சேவைகளையும் வழங்குதல் வேண்டும்.

கூறுவிலை அனுப்பும்போது பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களும் சேவை வழங்குனர்களும் தமது கூறுவிலைகளை கட்டாயப்பாக குறிப்பிட வேண்டும். பணிப் பாளர் வெளியாரிடமிருந்தும் கூறுவிலை கூறுவதற்கு உரிமை கொண்டிருப்பார் என்பதும் அறிவிக்கப்படுகின்றது.

**(A) SUPPLIES**

01. Stationery Items with local and imported computer stationery, printed computer stationery, photocopy paper, C.R.books, ball point pens, pencil, envelops, carbon papers, white papers.
Staplers, correcting fluids, stencils, diskettes, magnetic tapes, computer materials including printer ribbons and paper, toner, cartridges, glue cubes and liquid glue.
02. Furniture (Wooden)
03. Furniture (steel)
04. Mats/ broom and Ekil brooms.
05. Coir mattress and rubber
06. All type of linen item, Mackintosh and clothing item, elastic and Nylon cords.
07. All aluminium items and household equipments.
08. Ceramics glassware items.
09. Paint, varnish and floor polish, surgical spirit and nail items.
10. Washing soda, cleaning detergents, Vim, harpic, Saving blades and matches.
11. Building materials.
12. Spare parts of the all type of vehicles.
13. Plumbing items, P.V.C pipe & etc.
14. All type of batteries.
15. Leather and leather products.
16. Hardware items, pad lock, galvanized bucket and nails etc.
17. Electrical appliances, Air conditioners, Refrigerators, ceiling fans, pedestal fans & Bulbs etc.
18. All type of Rexene and polythene items.
19. Drugs and milk food items.
20. Rubber stamps.
21. Computer and related accessories.
22. Dressing.
23. Surgical consumables.
24. Surgical instruments.
25. Surgical equipments.
26. Dental consumables.
27. Laboratory equipments.
28. Carpentry Items (all type of wood, planks etc)

**(B) SERVICES.**

01. Repair of steel furnitures.
02. Repair of wooden furnitures.
03. Repair of electrical appliances (Air conditioners, refrigerators, Deep freezers, Repair and service of Typewriters, calculators, roneo machine, computer & printers.
04. Printing (all type of forms).
05. Repair of surgical appliances, X - ray machine & all other hospital equipments.
06. Rewinding of electrical motors, fans etc.
07. All kind of mechanical equipment services, maintenance and repair.
08. Gas/ Oxygen equipment services and repair (gas burner & gas cooker).
09. Water pump sewerage machine repairs and maintenance.
10. Repairs of water supply and Toilet pipes.
11. Disposal of hospital garbage.
12. Sewing works.
13. Supply of official identity card.
14. Repairs of Buildings.

**(C) VEHICLE REPAIRS & SERVICES.**

01. Repairs, electrical works and cushion works of type of vehicles.
02. Services of all type of vehicles.

Dr.A.E.Gnanajothy.
Director,
Teaching Hospital, Jaffna.

## பண்ணையாளருக்கு பெரும் பாதிப்பு

கோப்பாய்,டிசெ.10
கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் 250க்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

கிடைத்த பதிவுகளின்படி ஆயிரம் மாடுகள், 350 ஆடு கள், ஆயிரத்து 200 கோழிகள் அழிவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை அழிவுகள் தொடர்பாக பதிவினைமேற்கொள்ளாத பண்ணையாளர்கள் நாளை வியாழக்கிழமைக்கு முன்னதாக கோப்பாய் கால்நடை மருத்துவ நிலையத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.
(203-72)

## பிரதேச செயலகக் கூட்டங்கள்

கோப்பாய்,டிசெ.10
கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக்கூட்டமும் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.
(203-72)

## ஆங்கிலபாடப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.10
சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நடத்தப்பட்ட விசேட ஆங்கில வகுப்புகளில் பங்கு பற்றியவர்களுக்கான பரீட்சை எதிர் வரும் 21ஆம் திகதி காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றிய அனைவரையும் பரீட்சைக்குத் தோற்றுமாறு கழகச் செயலாளர் லயன் எஸ். கே.நவரத்தினம் அறிவித்துள்ளார்,
(203-207)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.க.கமலரூபன்**
B.Com (Hons), MBA
[கணக்காளர், வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்]

ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் 27.11.2008 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டம் MBA பெற்ற எமது அலுவலகக் கணக்காளர் திரு.க.கமலரூபன் அவர்களைப் பாராட்டுவதோடு மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று உயர வேண்டும் என வாழ்த்துகின்றோம்

வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம். (சி/555931) நிதிக் கிளை அலுவலர்கள்.

## செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை
## பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம் : 28.12.2008 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி
இடம் : செம்மணி மயான மண்டபம்
தலைவர் : திரு.செ.குகதாசன் அவர்கள்

நிகழ்ச்சி நிரல்:
1.தேவாரம் 2.பிரேரணைகள்/அறிக்கைகள் 3.தலைமையுரை
4.புதிய நிர்வாகிகள் தெரிவு 5.பிறவிடயங்கள் 6.நன்றி உரை

* சகல உறுப்பினர்களையும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி கோருகின்றோம். தனிப்பட்ட அழைப்புக்களை எதிர்பார்க்க வேண்டாம்.
* புதிய உறுப்பினர்களாக இணைய விரும்புபவர்கள் கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொண்டு உறுப்புரிமை பெற விண்ணப்பிக்கலாம்.

செ.குகதாசன்
தலைவர்.

லயன் வல்லிபுரம் பரமசிவம் (ஜே.பி)
கௌரவ செயலாளர்.

இ.தனிகைநாதன்,
பொருளாளர்.
(80586)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பணியாளர் திரு.திருநாவுக்கரசு சுதாகரன் அவர்களது பாசமிகு தந்தை

**கிருஷ்ணர் திருநாவுக்கரசு**

அவர்கள் சிவபதம் எய்திய செய்தி அறிந்து அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர், பொது முகாமையாளர், பணியாளர்கள்,
யாழ்ப்பாண மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

## மரண அறிவித்தல்
## செல்லையா சபாலிங்கம்

[இலங்கை வங்கி, முல்லைத்தீவு]



அல்வாய், பாரதி பவனத்தைப் பிறப்பிடமாகவும் வதிரி, ஆனந்தா வாசத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சபாலிங்கம் 5.12.2008இல் காலமானார்.

அன்னார் அல்வாயூர் கவிஞர் செல்லையா நாகமுத்து தம்பதியரின் மகனும் தம்பிப்பிள்ளை அன்னப்பிள்ளை - தம்பதியரின் மருமகனும் ஆனந்தாதேவியின் அன்புக்கணவரும் துஷ்யந்தன் (இலங்கை வங்கி, பருத்தித்துறை), பிரசாத் (இலங்கைவங்கி, முல்லைத்தீவு) ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற விவேகானந்தன் (இலங்கை வானொலிக் கலைஞர்), இரத்தினராசா பாரதி ஆகியோரின் சகோதரனும் அர்ச்சனா, ஜெயபாரதி, புனிதா, சுதர்சனா (கனடா), சங்கீதா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் செல்வரூபி (லண்டன்), கலாரூபி, கவிச்செல்வம், கார்த்திகா ஆகியோரின் சிறிய தந்தையும் அனுராகன், அகில்ஷன், பிரக்ஷிகா, ஹரிஸ்ணன், லக்ஷாயினி, றக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 7.12.2008 ஞாயிற்றுக்கிழமை புதுக்குடியிருப்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பொன்மகள் வாசம்'',
கவிஞர் செல்லையா வீதி,
அல்வாய். (80577)

விவேகானந்தன் கவிச்செல்வம்
(கியூடெக் கரித்தாஸ்).


## YOGI'S

(Academy of Beauty Culture, Hair Dressing and Home Science)

**பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 3 நாள்கள் மட்டும்**

1) 6 விதமான கேக் வகைகள் - - 14.12.2008
2) 6 விதமான இனிப்பு வகைகள் (Sweets) - 20.12.2008
3) 6 விதமான பேஸ்ரி வகைகள் (Pastrys) - 21.12.2008

குறிப்பு: மேலைத்தேய கீழைத்தேய சமையல் செய்முறை விளக்கமும் விரைவில் நடைபெற உள்ளது. (2 நாள்கள் மட்டும்)

ஆர்வமுள்ளோர் முன்கூட்டியே உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
இருபாலாரும் பங்குபெறலாம்.

Phone: 021 222 2796
060 221 0077
077 7164923
071 2510025

75, அம்மன் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசு தமிழரை அழித்துவிட்டு யாருடன் பேச்சு நடத்தப் போகின்றது?

## அரவாணிகள் நடத்திய உண்ணாவிரதத்தில் கனிமொழி ஆவேசக் கேள்வி



தமிழ் மக்களைக் கூண்டோடு அழித்துவிட்டு, இலங்கை அரசு யாருடன் பேச்சு நடத்தப் போகின்றது? - என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கேள்வி எழுப்பியுள்ளார்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தினச் செய்தியில் கேள்வியெழுப்பியிருந்த கருத்தையே இவரும் பிரதிபலித்துள்ளார்.

தமிழர்களுக்கு எந்த மண் சொந்த மண்ணோ அங்கேயே அவர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். இலங்கை அரசு அனைத்து மக்களையும் அழித்து விட்டுத்தான் போர் நிறுத்தம் என்று கூறுகிறது - என்றும் அவர் சொன்னார்.

இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்கள் மீது, இராணுவத் தாக்குதல் நடத்தும் இலங்கை அரசைக் கண்டித்து தமிழக அரவாணிகள் சங்கங்களின் சார்பில் சென்னையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உண்ணாநிலைப் போராட்டம் நடைபெற்றது.

சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் நடைபெற்ற இந்த உண்ணாநிலைப் போராட்டத்தைத் தொடங்கி வைத்து பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசியவை வருமாறு-

சமுதாயத்தினால் ஒடுக்கப்பட்டு, மொழியற்று புறக்கணிக்கப்பட்டு வாழ்கின்ற அரவாணிகள், ஈழத் தமிழர்களுக்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவது மிகவும் குறிப்பிடத்தக்கதும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்குத்தான் ஒடுக்கப்பட்ட மக்களின் வலி தெரியும். இந்த சமூகத்தில் அரவாணிகளுக்கு உணர்வு, உரிமை ஆகிய அனைத்துமுள்ளன. அரவாணிகளுக்கு வேலை வாய்ப்பு, கல்வி, அங்கீகாரம் ஆகியவை மறுக்கப்படுகின்றன.

பெண்கள் என்றால் சமூக அக்கறை இல்லாதவர்கள் என பலர் நினைக்கின்றனர். இந்த நிலை மாற வேண்டும். இலங்கையில் இனப்படுகொலையால் தமிழர்கள் அழிக்கப்பட்டு வருகின்றனர். மனித உரிமைகள் மீறப்படுகின்றன. தமிழர்களுக்கு எந்த மண் சொந்த மண்ணோ அங்கேயே அவர்கள் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். இலங்கை அரசு அனைத்து மக்களையும் அழித்துவிட்டுத்தான் போர் நிறுத்தம் என்று அறிவித்துள்ளது.

எல்லா மக்களையும் அழித்து விட்டால், யாருடன் அவர்கள் பேச்சு நடத்தப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. இலங்கையில் நடக்கும் படுகொலையைக் கண்டித்து பல்வேறு அரசியல் கட்சிகளால் போராட்டங்கள் நடத்தப்பட்டன. முதல்வர் கருணாநிதி தலைமையில் அனைத்துக் கட்சிக் குழுவும் டில்லி சென்று போரை நிறுத்த பிரதமரிடம் வலியுறுத்தி வந்துள்ளது.

மாணவர்கள் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் அரவாணிகள் அவர்களுக்காக போராடி வந்த நிலையில் தற்போது சமுதாய அக்கறையுடன் இலங்கை தமிழர்களுக்காகப் போராட்டம் நடத்துவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது - என்றார்.

உண்ணாவிரதத்தில் கலந்துகொண்ட அரவாணிகள் அனைவரும் கறுப்பு சேலை அணிந்திருந்ததுடன், தங்களது ஒருநாள் சம்பளத்தையும் ஈழத் தமிழர்களுக்காகக் கொடுத்தனர்.



ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து ஒருங்கிணைந்த தமிழக அரவாணிகள் சங்கத்தினர் சேப்பாக்கத்தில்

# மத்தியில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சி.

## கருணாநிதி நம்பிக்கை



சென்னை, டிச. 10

'நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் மத்தியில் காங்கிரஸ்தான் மீண்டும் ஆட்சி அமைக்கும்' - என்று முதல்வர் கருணாநிதி நம்பிக்கை தெரிவித்தார்.

தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு திங்கட்கிழமை அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு-

வட மாநில சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளைப் பொறுத்த வரை, காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி என்றுதான் கூறவேண்டும். நாடாளுமன்றத் தேர்தலிலும் இந்த வெற்றி எதிரொலிக்குமா எனக் கேட்கிறீர்கள். நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சிதான் ஆட்சி அமைக்கும் - என்றார்.

3 மாநிலத்தில் ஆட்சியைப் பிடித்ததற்காக காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கு, முதல்வர் கருணாநிதி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சோனியாவுக்கு அவர் அனுப்பிய வாழ்த்துச் செய்தி வருமாறு-

3 மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி ஆட்சியைப் பிடித்தமைக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்களது பிறந்த நாளை ஒட்டி, 3 மாநிலத் தேர்தலில் வெற்றி என்ற நல்ல செய்தி வந்துள்ளது. நாடும், நாட்டு மக்களும் தங்களது தலைமையில் நிறைந்த நம்பிக்கையை வைத்துள்ளனர். தாங்கள் நீண்ட காலம் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் - என்றுள்ளது.

# நாடாளுமன்றுக்கு முன்கூட்டியே தேர்தல்: பெப்ரவரியில் நடத்த காங்கிரஸ் திட்டம்!

## 3 மாநிலங்களில் பெற்ற வெற்றியின் எதிரொலி

புதுடெல்லி, டிச. 10

3 மாநிலங்களில் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டியே பெப்ரவரி மாதம் தேர்தல் நடத்த காங்கிரஸ் கட்சி திட்டமிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் நடைபெற்ற 5 மாநில சட்டசபை தேர்தல்களில் ராஜஸ்தான், டில்லி, மிஜோரம் ஆகிய 3 மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி, ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. இதனால் காங்கிரஸ் கட்சி பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளது.

இதேவேகத்தில், நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றியை ஈட்ட திட்டமிட்டுள்ளது. நாடாளுமன்றத்துக்கு ஏப்ரல் மாதம் தேர்தல் நடக்கவுள்ளது. ஆனால், தற்போது மக்களின் மனநிலை தங்களுக்குச் சாதகமாக இருப்பதாக காங்கிரஸ் கருதுகிறது.

3 மாநிலங்களிலும் முதல்வர்கள் யார் என்பதை சோனியா காந்தி முடிவு செய்வார்.

இந்த வெற்றியால் தற்போது காங்கிரஸ் கட்சி பலமான நிலையில் இருப்பதால், நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டியே தேர்தல் நடத்த காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது. அநேகமாக, பெப்ரவரி மாதம் கூட தேர்தல் நடத்தப்படலாம். அரசியலில் எல்லாமே சாத்தியம்தான். இதுபற்றி இன்னும் சில நாட்களில் ஆலோசனை நடத்தப்படும்.

நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வருவதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது. அந்த நம்பிக்கையில் அது உள்ளது.

### தேர்தல் முடிவுகள்

| மாநிலங்கள் | காங்கிரஸ் | பா.ஜ.க. | பிற |
|---|---|---|---|
| டில்லி | 42 | 23 | 4 |
| ம.பிரதே. | 71 | 142 | 16 |
| ராஜஸ்தான் | 96 | 78 | 26 |
| சத்தீஸ்கர் | 38 | 50 | 2 |
| மிசோரம் | 32 | 0 | 8 |

### தொடர்ந்து 3 தடவை முதல்வராகி ஷீலா தீட்சித் 'ஹட்ரிக்' சாதனை



டில்லியில் 3ஆவது முறையாக முதல்வர் பொறுப்பை ஏற்கவிருக்கும் ஷீலா தீட்சித் (வயது-71), தொண்டர்களின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொள்கின்றபோது........

# ஈழத் தமிழருக்கு ஆதரவாக தொழில்நுட்பத் துறையினர் வரும் 13ஆம் திகதி உண்ணாவிரதப் போருக்கு அழைப்பு

சென்னை, டிச. 10

ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைகளை நிறுத்தக்கோரி ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தகவல் தொழில்நுட்பத்துறை இளைஞர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

எதிர்வரும் சனிக்கிழமை (13.12.08) காலை 9 தொடக்கம் மாலை 6 வரையில் சென்னை [illegible]ல் கோயம்பேடில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். மேலும், உண்ணாவிரதப் போராட்டத்துக்கான அழைப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

ஓ.எம்.ஆர். வீதியில் 'டபுள் பெட்ரூம் பிளாட்' வாங்குவது பற்றி திட்டமிடுகின்றோம் நாம். மேலிருந்து விழும் குண்டுகளிலிருந்து தங்களைக் காத்துக் கொள்வதற்காக குடிசைகளிலிருந்து வெளியேறி காடுகளில் அடைக்கலம் புகுகின்றனர், ஈழத்தமிழர்கள்.

இரவு கொசுக்கடியிலிருந்து தப்பிக்க என்ன வழி என்று யோசித்துக் கொண்டிருக்கின்றோம் நாம். பகலில் கடிக்க வரும் பாம்புகளிலிருந்து தப்பிக்கும் வழியறியாது அடர்ந்த வனங்களில் நாளாந்தம் இறக்கின்றனர் அவர்கள்.

அடுத்த வேளை உணவு, 'கே.எவ்.சி. சிக்கன்' ஆ அல்லது 'பிஸா கட்' ஆஎன்று நண்பர்களுடன் பேசுகின்றோம் நாம். நாளைக்காவது ஒருவேளை உணவு கிடைக்குமா என்று சொந்த நாட்டில் அகதிகளாகத் தவிக்கின்றனர் அவர்கள்.

பொங்கலுக்கு ஊருக்குப் போக இரண்டு மாதங்களுக்குமுன்பே விண்ணப்பம் செய்கின்றோம் நாம். எப்போது தாய்நாடு போவோம் என்பது குறித்து யாதொரு நம்பிக்கையுமின்றி அகதிகளாக உலகெங்கும் சிதறிக் கிடக்கின்றனர் அவர்கள்.

சத்யம் சினிமா, ரிசார்ட், சனிக்கிழமை இரவுக் கொண்டாட்டங்கள் என சுகமாய் வாழ்கின்றோம் நாம். ஒவ்வொரு நொடியைக் கழிப்பதும் போராட்டமாய் வாழ்கின்றனர் அவர்கள்.

நாமும் தமிழர்கள், அவர்களும் தமிழர்கள் எனில், நாம் அவர்களுக்காக என்ன செய்யப் போகின்றோம்?

செய்ய வேண்டியது ஆயிரம் இருப்பினும், சிங்களப் பேரினவாத அரசுக்கு எதிரான நமது எதிர்ப்பை, ஈழத்தமிழர்களுக்கான நமது ஆதரவைத் தெரிவிக்க ஒருநாள் உண்ணாவிரதம் இருப்போம், வாருங்கள் நண்பர்களே! என்றுள்ளது.

# சரத் பொன்சேகாவின் கொடும்பாவி எரிப்பு



இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து விடுதலை சிறுத்தைகள் அமைப்பினர் நேற்றுமுன்தினம் கொளத்தூர் பஸ் நிலையம் அருகே ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

முன்னதாக அவர்கள் போண்டா மார்க்கெட் பகுதியிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு வந்தனர். ஆர்ப்பாட்டம் முடிவில் இலங்கை இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் உருவப் பொம்மையை விடுதலை சிறுத்தைகள் அமைப்பினர் எரித்தனர். [illegible] பரப்பும் பதற்றமும் ஏற்பட்டன.

# சோனியாவைக் கொல்வோம்! முடிந்தால் தடுத்துப் பாருங்கள்

## பொலிஸாருக்கு தொலைபேசி மிரட்டல்



திருவனந்தபுரம், டிச.9-

அடுத்த வாரம் கேரளாவுக்கு வரும் சோனியாகாந்தியையும், ஆயிரம் பேரையும் கொலை செய்வோம் - என்று வளைகுடா நாடொன்றிலிருந்து மர்ம மனிதன் ஒருவன் தொலைபேசியில் மிரட்டல் விடுத்தான்.

கேரள மாநிலம் கொச்சியில் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில், மாநில காங்கிரஸ் மாநாடு நடைபெறுகிறது. அதில் பங்கேற்பதற்காக, காங்கிரஸ் தலைவரும், ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவருமான சோனியா காந்தி கேரளா வருகிறார். இதையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கேரள மாநிலம் கொல்லத் [illegible] அலுவலகத்துக்கு ஒரு மர்ம [illegible] அழைப்பு வந்தது. அதில் பேசிய ஆசாமி, 'சோனியா காந்தி, காங்கிரஸ் மாநாட்டுக்கு வரும்போது, மாநாட்டு அரங்கத்துக்குள் 10 தீவிரவாதிகள் நுழைந்து சோனியாவையும், மாநாட்டிலிருக்கும் சுமார் ஆயிரம் பேரையும் தீர்த்துக் கட்டுவர். முடிந்தால் இதை பொலிஸார் தடுத்துப் பார்க்கட்டும்' என்று கூறி தொலைபேசியைத் துண்டித்து விட்டான். அவன் மலையாளத்தில் பேசினான்.

அவன் எங்கிருந்து பேசினான் என்று பொலிஸார் ஆய்வு செய்தனர். அதில், வளைகுடா நாடுகளில் ஒன்றான மஸ்கட்டில் உள்ள பொது தொலைபேசி 'பூத்'தில் இருந்து அவன் பேசி இருப்பது தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



செல்வன்

## வீரேஸ்வரன் பானுஜன்

(தரம் -6, யா/இடைக்காடு மகாவித்தியாலயம்)

09.12.2008 அன்று அகாலமரணமடைந்த எமது பாடசாலை மாணவன் வீரேஸ்வரன் பானுஜன் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

## சாரணீய வழிகாட்டுநர் பயிற்சி வகுப்புக்கள்

சாரணீய வழிகாட்டுநர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் யாழ்.மத்திய கல்லூரி ஆரம்ப பிரிவில் இடம்பெறவுள்ளன.

வழிகாட்டுநர்களை சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட சாரணீய ஆணையாளர் கேட்டுள்ளார். (1)


பதிய 5ஆவது கிளை நிறுவன திறப்ப விழா

யாழ்.நகரில்No.01 கல்வி நிறுவனம்

எடிசன் அக்கடமி

தனது புதிய 05.ஆவது கிளை நிறுவனத்தை சண்டிலிப்பாய்ச் சந்தி (சீரணிச் சந்தி)யில் மகிழ்ச்சியுடன் ஆரம்பிக்கின்றது.

காலம்: இன்று (10.12.2008)

நேரம்: பிற்பகல் 4.00 மணி

பிரதம விருந்தினர்: திருமதி ரூபினி வரதலிங்கம் (பிரதேச செயலர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)

இடம்: சண்டிலிப்பாய்ச் சந்தி, (சீரணிச் சந்தி), சண்டிலிப்பாய்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

எடிசன் அக்கடமி. (80596) திரு.B.P.பாஸ்கரன், இயக்குநர்.


# கண்ணீர் அஞ்சலி



எமது கழக உறுப்பினர் லயன் சி.தேவகுமார் அவர்களின் பாசமிகு தாயார் திருமதி சிவானந்தம் சிவபாக்கியம் அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி கிழக்கு, லயன்ஸ் கழகம், கொடிகாமம்.

## காணாமற் போனோர் தொடர்பான கவனயீர்ப்பு நிகழ்வு

கொழும்பு, டிசெ.10

காணாமற்போனோரைத் தேடியறியும் குழு மனிதவுரிமை தினமான இன்று முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தவுள்ளது.

கொழும்பு புறக்கோட்டை குணசிங்கபுர பேருந்து நிலையத்துக்கு முன்பாக உள்ள பிறைன் திடலில் நடைபெறவுள்ள கவனயீர்ப்பு நிகழ்வில் காணாமற் போனவர்களின் சகல குடும்ப அங்கத்தவர்கள், சமூகநலன்விரும்பிகள், மனித வுரிமை ஆர்வலர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (201)

## யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கம் (வ-து)

### வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்

சகல அங்கத்தவர்களின் கவனத்திற்கும்,

அன்புடையீர்,

*14.12.2008 இல் நடைபெற இருந்த வருடாந்தப் பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. மறுதிகதி காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்.*

செ.பேரின் பநாதன், தலைவர்.

டெ.இம்மானுவேல், செயலாளர்.

# ஈராண்டு நினைவலைகள்

மலர்வு 30.08.1928



உதிர்வு 03.12.2006

## அமரர் கந்தையா பஞ்சலிங்கம்

(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர்)

திதி: பூர்வபக்க திரயோதசி(10.12.2008)

அழியாத உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில் அணையாத தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும்.

தாவடி வடக்கு, கொக்குவில்.

உங்கள் பிரிவால் வாடும்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஒளிவிழா நிகழ்வு

வண்ணை, டிசெ.10

யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்க பணியாளர்களின் வருடாந்த ஒளி விழா ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணிக்கு சங்கத் தலைவர் ப.கிரிதரன் தலைமையில் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

தலைமையுரை மற்றும் தேநீர் இடைவேளையை அடுத்து இன்னிசை நிகழ்ச்சியும், மதிய போசனத்தைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (1-160)

# மரண அறிவித்தல்கள்

## கார்த்தி குணசிங்கம் (குணம்)

*(உரிமையாளர், குணம் ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி)*



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கார்த்தி குணசிங்கம் 08.12.2008 திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்தி-முத்து தம்பதியரின் அன்பு மகனும் சுசிலாதேவியின் அன்புக் கணவரும் அமுதா, சுபாஸ்கரன், றசிதா, சுசிதா, சுபாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற முரளிதாசின் அன்பு மாமனும் தங்கவேலு, வேலம்மா,சிவலிங்கம், பரம்சோதி, நடேஸ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சஞ்சை, கேனுஜா, கிரிசாந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2008) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு, மீசாலை.* (80592)

*தகவல்:* குடும்பத்தினர்.

## நாகேஸ்வரத்தில் விஷ்ணு தீப பூசை

வண்ணை, டிசெ. 10

அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை வியாழக்கிழமை விஷ்ணு ஆலய தீபம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 8மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும்.

முற்பகல் 9மணிக்கு சிறப்பு சமயச் சொற்பொழிவு இடம்பெறும். 10மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி வீதியுலா எழுவார். பிற்பகல் 4மணிக்கு விஷ்ணு தீபப் பூசை நடைபெறும். (1-160)

# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27.11.1949

மறைவு 17.11.1994



## அமரர் சிவகுரு நவரத்தினம்

(உரிமையாளர், கனகா பத்திரிகையகம், திருநெல்வேலி)

திதி: திரயோதசி (10.12.2008)

அழியாத உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில் அணையாத தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும்.

என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

நிரந்தர முகவரி: "கனகா இல்லம்", கைதடி கிழக்கு.

தற்காலிக முகவரி: 60, பலாலி வீதி, திருநெல்வேலி.

நீங்காத நினைவுகளுடன் குடும்பத்தினர். (80595)

## 'நிஷா' புயலினால் 54 மாடுகளை இழந்த பண்ணையாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 10

அண்மையில் நிகழ்ந்த 'நிஷா' புயல் மற்றும் வெள்ளம் காரணமாக வரணி குடமியனைச் சேர்ந்த இளம் பெண் பண்ணையாரின் 54 மாடுகள் இறந்தும் காணாமற் போயுமுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

94 மாடுகளை வைத்து பண்ணை நடத்திவந்த கிருபாகரன் கிருஷ்ணவாணி என்னும் பண்ணையாளரிடம் தற்போது 40மாடுகளே எஞ்சியிருப்பதாகவும் ஏனைய 54 மாடுகளில் 31மாடுகள் இறந்தும் 23மாடுகள் காணாமற்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒரே நேரத்தில் பெரும் பாதிப்புக்கு இலக்கான இப் பெண் பண்ணையாளருக்கு பல ரூபா லட்சம் நட்ட மேற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)


உடனடி வேலைவாய்ப்பு

செம்மணி உப்பளத்தில் 18 – 45 வயதுடைய பெண் தொழிலாளர்களுக்கான உடனடி வேலை வாய்ப்பு உள்ளது. விரும்புவோர் 15.12.2008 க்கு முன்னர் காலை 9.00-12.00 மணிக்குள் [illegible]

[illegible] முகாமையாளர், மாந்தை சோல்ட் லிமிட்டெட், செம்மணி.

(சி/555938)


## திருமதி இராசலட்சுமி செல்லத்துரை

*(ஓய்வுபெற்ற ஆசிரியை)*



அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட இராசலட்சுமி செல்லத்துரை (முத்தக்கா) 07.12.2008 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா செல்லத்துரையின் அருமை மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா- பொன்னம்மா தம்பதியரின் இளையமகளும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா- சின்னம்மா தம்பதியரின் அருமை மருமகளும் பிரான்ஸை வதிவிடமாகக் கொண்ட கேதீஸ்வரன் (ஈசன்), ஜோதீஸ்வரன் (சோதி), மகேஸ்வரன் (மகேஸ்), சிவமதி, லண்டனை வதிவிட மாகக் கொண்ட கலைமதி ஆகியோரின் அன்புத் தாயும் பிரான்ஸை வதிவிடமாகக் கொண்ட அற்புதவதனி, யோகேஸ்வரி, மாலினி, தர்மபாலா, லண்டனை வதிவிடமாகக் கொண்ட பால்ராஜன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர் களான திருமதி பாக்கியம் வைத்திலிங்கம், திருமதி அருமைரத் தினம் சுப்பிரமணியம், கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரான்ஸை வதிவிடமாகக் கொண்ட கஜானி, கஜந்தன், கௌதமன், நிக்ஷாலினி, ஜோதிகாந்தா, ஜொனத்தன், தினேஸ், நிரோசன், பிரகாஸ், நிஷாந்தன், தனுசன், சஜிதன், கனிஷ்ரா, லண்டனை வதிவிடமாகக் கொண்ட ஜதீஸ், சஜித்தா, கிருஷ்சாந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.12.2008) வியாழக்கிழமை 9-11 மணி வரை 96Rue Saint Denis, 77400 Lagny sur Marne, France இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தகனக்கிரியைகள் 13.30 - 14.30, 95Rue Marcel Sembat, 93460, Villetaneuse, France இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

598, நாவலர் வீதி, அரியாலை.

தொடர்புகளுக்கு ஜோதீஸ்வரன் (சோதி) *0033 1 64 44 06 02, 0033 06 64 86 29 27*

*தகவல்:* குடும்பத்தினர்.

தியாகராசா - சந்திரபவானி, யோகராசா - கலாநிதி } பெறாமக்கள்

(80597)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தளபதியின் கருத்து இந்திய மக்களை இழிவுபடுத்துகிறது அந்நாட்டு அரசை இந்தியா எச்சரிக்கவேண்டும்

## பிரதமர் மன்மோகனுக்கு வைகோ கடிதம்

சென்னை, டிசெ.10

இலங்கையின் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கருத்து, இந்தியாவையும் இந்திய மக்களையுமே இழிவுபடுத்துவதாகும். எனவே, அவரது கருத்தை இந்தியா கண்டிப்பதுடன், இது குறித்து இலங்கை அரசுக்கும் எச்சரிக்கை செய்யவேண்டும் என மறுலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு வைகோ நேற்றுச் செவ்வாய்க்கிழமை எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

மிகுந்த ஆணவத்தோடும், திமிரோடும் தெரிவித்திருக்கின்ற கருத்துகள், இலங்கை அரசின் அதிகாரபூர்வ பத்திரிகையான 'சண்டே ஒப்சேவரில்' டிசம்பர் 7ஆம் திகதி வெளியாகி இருப்பதை, மிகுந்த வேதனையோடு தங்களின் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

தமிழ்நாட்டு அரசியல் கோமாளிகள் சொல்லுகின்ற கருத்துகளை, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு செவிமடுக்காது; எனவே, போர்நிறுத்தம் செய்யுமாறு இலங்கை அரசை இந்திய அரசு ஒருபோதும் கேட்டுக் கொள்ளாது என்று கொக்கரித்துள்ளார்.

இலங்கையில் போர்நிறுத்தம் செய்வதில் இந்திய அரசுக்கு உடன்பாடே கிடையாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வருகின்ற போரில், இலங்கை விமானப்படை கண்மண் தெரியாமல் காட்டுமிராண்டித்தனமாக வீசுகின்ற குண்டுகளால், அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள். இது தொடர்பாக நான் ஏற்கனவே தொடர்ந்து தங்களுக்கு எழுதியுள்ள கடிதங்களில், தகுந்த ஆவணங்களுடன் எனது குற்றச்சாட்டுகளை உறுதிசெய்திருக்கிறேன்.

ஆனால், தமிழ்நாட்டில் உள்ள கறைபடிந்த அரசியல்வாதிகள் தாம் இத்தகைய குற்றச்சாட்டுகளைக் கூறி வருகிறார்கள்; அவர்கள் விடுதலைப் புலிகளால் விலைக்கு வாங்கப்பட்டவர்கள்; விடுதலைப் புலிகள் அழிந்தால் அவர்களுக்கு வருமானம் போய்விடும் என்பதற்காக இப்படிக் கூறுகிறார்கள் என்று, இலங்கை இராணுவத்தின் தலைமைத் தளபதி இழிவுபடுத்தியுள்ளார்.

2008 நவம்பர் 12ஆம் திகதி, தமிழ்நாடு சட்டமன்றத்தில், இலங்கையில் போர் நிறுத்தம் மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை இந்திய அரசு உடனே மேற்கொள்ள வேண்டும் என்று கோரி, அனைத்துக்கட்சியினராலும் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருப்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

**புதுடில்லிக்கு வந்து ஆணவத்தோடு கூறிச்சென்ற மஹிந்தா**

இந்தத் தீர்மானம், தமிழ்நாட்டில் வாழ்கின்ற ஏழு கோடி தமிழ் மக்களின் ஒட்டுமொத்தக் கருத்து ஆகும். பாசிச வெறி பிடித்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசு, ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்து வருவதைக் கண்டு, தமிழ்நாட்டில் உள்ள ஏழு கோடி தமிழர்களும் மிகுந்த மனவேதனைக்கு ஆளாகியுள்ளனர்.

தமிழ்நாட்டு மக்களின் குரலை ஒலிக்கின்ற வகையில் நிறைவேற்றப்பட்ட தமிழக சட்டமன்றத் தீர்மானத்தின் மை உலர்வதற்கு முன்னர், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு வந்து, நாங்கள் ஒருபோதும் போர்நிறுத்தம் செய்யமாட்டோம்; போரைத் தொடர்ந்து நடத்துவோம் என்று ஆணவத்தோடு கொக்கரித்துள்ளார்.

அவரது இந்தக் கருத்து, இந்திய அரசு போர்நிறுத்தம் செய்யுமாறு அவரிடம் கேட்கவில்லை என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போலத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது.

மாறாக, இந்திய அரசு, தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் இனப்படுகொலைத் தாக்குதல்களை மேலும் தீவிரமாக நடத்துவதற்காக, இலங்கை விமானப்படைக்கு ராடார்களை வழங்கியுள்ளது; ஆயுதங்களையும் அள்ளிக்கொடுத்து, இந்திய இராணுவ நிபுணர்களையும் உதவிக்கு அனுப்பியுள்ளது.

2008 ஒக்ரோபர் 2ஆம் திகதி தாங்கள் எனக்கு எழுதிய கடிதத்தில், இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காக நாங்கள் இத்தகைய பாதுகாப்பு உதவிகளைச்செய்து இருக்கிறோம் என்பதை ஒப்புக்கொண்டு இருக்கிறீர்கள்.

**நேரு, இந்திரா கொள்கையை காற்றில் பறக்கவிட்டுள்ளீர்கள்**

பண்டித ஜவஹர்லால் நேரு, இந்திரா அம்மையார் ஆகியோர் வகுத்த அயல் உறவுக் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டு, இலங்கை அரசின் இனப்படுகொலைத் தாக்குதல்களைத் தீவிரப்படுத்த நீங்கள் உதவியிருக்கிறீர்கள்.

இந்தப் பின்னணியில்தான், இலங்கை இராணுவத்தின் தலைமைத்தளபதி, தமிழ்நாட்டுத் தலைவர்களைக் கொச்சைப்படுத்தியும், இழிவுபடுத்தியும் துணிந்து கருத்துகளைக் கூறியுள்ளார்.

இந்தியாவின் அரசியல் வரலாற்றில், இதுவரையிலும் வேறு எந்த நாட்டு இராணுவத் தளபதியும், இந்திய அரசியல் தலைவர்களைப் பற்றி இப்படி இழிவான கருத்துகளைக் கூறியதில்லை.



மேலும், மக்கள் ஆட்சி நடைபெறுகின்ற எந்த ஒரு நாட்டிலும், இராணுவத் தளபதிகள்பிற அயல் நாடுகளின் தலைவர்களைப் பற்றிக் குறைகூறி விமர்சித்துக் கருத்துகளைச் சொல்வது இல்லை.

சரத்பொன்சேகாவின் கருத்து, இந்தியாவையும், இந்திய மக்ளையுமே இழிவு படுத்துவதாகும். எனவே, அவரது கருத்தை இந்தியா கண்டிப்பதுடன், இது குறித்து இலங்கை அரசுக்கும் எச்சரிக்க வேண்டும்.

சரத்பொன்சேகா நிபந்தனையற்ற மன்னிப்புக்கோர வேண்டும்; அவரது கருத்துக் குறித்து இலங்கை அரச தலைவர் விளக்கமளிக்க வேண்டும் என்று இந்தியா கோர வேண்டும்.

இந்தியாவின் கோரிக்கையை இலங்கை அரசு ஏற்காமல் ஒதுக்கித் தள்ளினால், இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவரை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்- என்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-சி)



உலக முஸ்லிம்களினால் புனித 'ஹஜ்' பெருநாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இந்தப் பெருநாளை முன்னிட்டு கொழும்பிலுள்ள மைதானம் ஒன்றில் முஸ்லிம்கள் ஹஜ் தொழுகையில் ஈடுபட்டிருக்கின்றமையைக் காணலாம்.

# நுளம்புத்திரிப்பெட்டிக்குள் இருந்த விஷப்பாம்பு கடித்து திருநெல்வேலி வாசி மரணமானார்

யாழ்ப்பாணம், டிசெ. 10

ஒருவனின் உயிரைக் காவு கொள்ள எமன் நினைத்துவிட்டால் அவன் எந்த வடிவத்திலும் எந்த நேரத்திலும் வந்து விடுவான். இது என்ன தத்துவமா என்று யோசிக்கிறீர்களா?

நுளம்புத்திரிப் பெட்டி ஒருவருக்கு எமனாக மாறிய உண்மைச் சம்பவத்தை தெரிந்து கொண்டால் அப்படிக் கேட்க மாட்டீர்கள்.

அது அவரின் கவனயீனம் என்று சொல்வீர்களோ...?

திருநெல்வேலி முருகன் வீதியைச் சேர்ந்த கந்தையா இராசதுரை(வயது 60) நேற்று முன்தினம் இரவு நுளம்புத் தொல்லையில் இருந்து தப்புவதற்காக நுளம்புத்திரிப் பெட்டியைத் திறந்தார். அந்தப் பெட்டிக்குள் சுருண்டு கிடந்த சிறிய விஷப்பாம்பு அவரது கையில் கொத்தியது.

அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்று மரணமானார்.

(அ-1-25-78)

# ப.நோ.கூ.சங்கப் பொருள்களுடன் நால்வரை மடக்கிப் பிடித்தனர் மக்கள்!

தொல்புரம், டிசெ. 10

சங்கானை ப.நோ.கூ.சங்கத்தின் பனிப்புலம் கிளையில் திருடப்பட்டதாகக் கருதப்படும் பொருள்களுடன் நால்வர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

பிரஸ்தாப கிளை கடந்த சனிக்கிழமை இரவு உடைக்கப்பட்டு அங்கிருந்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கோதுமைமா, அரிசி, சவர்க்காரம் உட்பட பல பொருள்கள் திருடப்பட்டிருந்தன.

அந்தப் பொருள்களை யாழ்ப்பாண நகரில் உள்ள கடை ஒன்றில் விற்க முயன்ற சமயம், பொதுமக்கள் ஏற்கனவே தகவல் கொடுத்ததன் பேரில் அந்த வர்த்தகர் நான்கு நபர்கள் குறித்து பொதுமக்களுக்கு தகவல் கொடுத்தார்.

அதனை அடுத்து பொதுமக்களால் பிடிக்கப்பட்ட அந்த நால்வரும் இளவாளைப் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளனர்.

பொலீஸார் அவர்களை விசாரணை செய்து வருகின்றனர். (அ-1-119)

# இன அழிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் பாராக் ஒபாமா மற்றும் புதிய வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் ஆகியோரின் நிர்வாகம், சர்வதேச விவகாரங்களையும் கையாள்கையில் - அதில் பல்வேறு நாடுக ளிலும் இடம்பெறக்கூடிய இன அழிப்புச் செயற் பாடுகளைத் தடுக்கும் முயற்சிகளில் - இந்த அறிக்கையே கொள்கையைத் தீர்மானிக்கும் வழிகாட்டி அம்சமாகப் பெரும்பாலும் அமையும் எனக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இனப்படுகொலையைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் 60ஆவது ஆண்டு பூர்த்தியை குறிக்கும் முகமாக நேற்று வெளியிடப்பட்டுள்ள இவ்வறிக்கையில், உலகில் மேலும் 33 நாடுகளில் இனப்படுகொலைகள் இடம்பெறுகின்றன அல்லது அதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் இன அழிப்புக் குறித்து கடும் அபாயம் நிலவும் நாடுகள் வரிசையில், இனப் படுகொலை தடுப்பிற்கான திட்டத்தின் 'சிவப்பு எச்சரிக்கை' பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம் பிடித்திருக்கிறது.

ஈராக், ஆப்கானிஸ்தான், மியன்மார், பாகிஸ் தான், சோமாலியா, சூடான், கொங்கோ ஆகிய னவும் இப்பட்டியலில் இடம்பிடித்துள்ளன.

தற்போதைய வன்முறைகள் இன அழிப்பாக மாறக்கூடிய அபாயம் சீனா, கொலம்பியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா ஆகிய 25 நாடுகளில் உள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

''இன ஒழிப்புகளை ஆரம்பத்திலேயே இனங்காண்பது சுலபம். எனினும் சர்வ தேச சமூகம் வெறுமனே பார்வையாளராக இருந்துவிட்டு முழுமையான தகவல்கள் கிடைத்த பின்னரே செயற்படத் தொடங்குகின்றது'' என இனப்படுகொலை தடுப்புத் திட்டத்தின் நிறைவேற்று இயக்குநர் ஜில் சாவிட் குற்றம் சாட்டியுள்ளார்.

**இன ஒழிப்புகளை பார்த்துக்கொண்டிருக்கும் சர்வதேசம்**

''இனப்படுகொலைகளில் உயிரிழப்புகளை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய நாடு கள் முன்னர் அத னைத் தடுப்பதற்கான இராஜதந்திர முயற்சிகள் இடம்பெறுவ தில்லை; இதற்கான அரசியல் உறுதிப்பாடும் சர்வதேசத்திடம் காணப்படுவ தில்லை'' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

'' இனப்படுகொலையைத் தடுப்பதற்கு மேலும் தீவிர இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அவசியமான சந்தர்ப்பத்தில் தலையிடத் தயாராகயிருக்க வேண்டும் '' என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பராக் ஒபாமா இனப்படுகொலையைத் தடுப்பதை தனது முன்னுரிமையாகக் கொள்ள வேண்டும் எனவும் சர்வதேச அளவில் இனப்படுகொலைகளை தடுத்து நிறுத்துவதற்கு அமெரிக்க காங்கிரஸ் 25 கோடி டொலர்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனவும் இந்த அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (அ-சி)

## மரண அறிவித்தல்

### அப்புத்துரை நவமணிப்பிள்ளை

தரைமண்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட அப்புத்துரை நவமணிப்பிள்ளை நேற்று(9.12.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் மனைவியும் திருமதி க. ஈஸ்வரி(கொழும்பு), ஸ்ரீஸ்கந்தராஜா(கனடா), திருமதி ச.யோகேஸ்வரி(கொழும்பு), அ.சோமஸ்கந்தராஜா (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கணேந்திரநாதன் மற்றும் சச்சிதானந்தன் (ஓமான்) ஜெகதாம்பிகை(கனடா), மகாலஷ்மி ஆகியோரின் மாமி யாரும், கிருஷாந்தி, சுமணதாஸ், கஜனன், புருஷோத்மன், அபர்ணா, செங்கோடன், அம்புஜா, தனேசன், தர்ஷிகா ஆகியோரின் பாட்டியும் டக்ஷாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2008) புதன் கிழமை பி.ப 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தரைமண்கலட்டி,*
*தெல்லிப்பழை கிழக்கு,*
*தெல்லிப்பழை.*
*060 221 0169*

தகவல் :
அ.சோமஸ்கந்தராஜா
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நடப்பது இனவெறி ஆட்சியே; உறுதிப்படுத்துகிறது பொன்சேகாவின் கூற்று

## குமுறுகிறார் தொல். திருமாவளவன்

சென்னை, டிசெ.10

யுத்தத்தால் கடும் இன்னல்களுக்கு உள்ளாகியிருக்கும் ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வரும் தமிழக அரசியல் கட்சித் தலைவர்களை கோமாளிகள் என்று இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கூறியிருப்பது இலங்கையில் நடப்பது காட்டுமிராண் டித்தனமான இனவெறி ஆட்சி என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது.

- இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் மனம் குமுறியுள்ளார்.

இதுகுறித்து வெளியிட்ட கண்டன அறிக்கை ஒன்றியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

தமிழக அரசியல் கட்சித் தலைவர்களை கோமாளிகள் என்றும், புலிகளிடம் பணம் பெற்றுக்கொண்டு அரசியல் செய்பவர்கள் என்றும் கேவலமாகக் கூறியிருப்பது, இலங்கையில் நடப்பது காட்டுமிராண்டித் தனமான இனவெறி ஆட்சி என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது.

**இந்தியாவின் இறையாண்மைக்குச் சவால்**

சரத்பொன்சேகாவின் முதிர்ச்சி இல்லாத போக்கை விடுதலைச் சிறுத்தைகள் வன்மையாகக் கண்டிக்கிறது. ஒட்டு மொத்த இந்திய பேரரசின் இறையாண்மைக்கே சவால்விடும் போக்காகும் இது.

எனவே, தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து இந்திய அரசு, சிங்கள அரசை கண்டிப்பதுடன் சரத் பொன்சேகாவை வெளிப்படையாக மன்னிப்புக் கேட்கும்படி வற்புறுத்த வேண்டும் - என்றுள்ளது.

தமிழக அரசியல் கட்சித் தலைவர்களை கோமாளிகள் என இழிவாகக் கூறிய இலங்கை இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் விமர்சனத்திற்கு கலைஞர் கருணாநிதி, ராமதாஸ், வைகோ, கம்யூனிஸ்ட் பாண்டியன் உட்பட பல்வேறு கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (அ-சி)

# புலிகளின் சடலங்கள் படையினரால் ஒப்படைப்பு

கொழும்பு, டிசெ. 10

மாங்குளம், ஒலுமடுப் பகுதியில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் உயிரிழந்தனர் என்று கூறப்படும் 11 விடுதலைப் புலி உறுப்பினர்களின் சடலங்கள் நேற்றுக் காலை செஞ்சிலுவை சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன என்று படைத்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

7 பெண் புலி உறுப்பினர்கள் மற்றும் 4 ஆண் புலி உறுப்பினர்களின் சடலங்களே செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன என்றும் படைத்தரப்பு கூறியிருக்கின்றது.

இந்தச் சடலங்களை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று படைத்தரப்பு மேலும் தெரிவித்துள்ளது.

# 2006 தொடக்கம் இப்போது வரை 8 ஜனாதிபதி ஆணைக்குழுக்கள்

கொழும்பு, டிசெ. 10

பல்வேறு விடயங்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக 2006ஆம் ஆண்டு முதல் இப்போது வரை எட்டு ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன என்று அரசின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் தொடர்பாக ஐ.தே.கட்சி எம்.பி ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

* 2000 ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விலைகூடிய ஆயுதக் கொள்வனவு தொடர்பாக விசாரிக்கும் ஆணைக்குழு.
* 2001 முதல் 2005 ஆம் ஆண்டுவரை இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்பட்ட ஆயுதக் கொள்வனவு தொடர்பாக விசாரிக்கும் ஆணைக்குழு.
* தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. ஜோசப் பரராஜ சிங்கத்தின் கொலை தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக் குழு.
* 2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 13ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நாடு முழுவதும் இடம்பெற்ற கடத்தல்கள், காணாமல்போதல்கள் மற்றும் தாக்குதல்கள் போன்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரிக்கும் ஆணைக்குழு.
* மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழு.
* சமீபத்தில் நாடு முழுவதும் இடம்பெற்ற கடத்தல், காணாமல் போதல், கொலை மற்றும் அடையாளம் காணப்படாத உடல்களைக் கண்டெடுத்தல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழு.
* தோல்வியடைந்த நிதி நிறுவனங்கள் தொடர்பாக விசாரணை நடத்தும் ஆணைக்குழு.
* இறைவரித் திணைக்களத்தில் இடம்பெற்ற 'வற்' மோசடி தொடர்பாக விசாரிக்கும் ஆணைக்குழு.

-ஆகியவையே அந்த எட்டு ஆணைக்குழுக்களும் என்று தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்தார். (சி)

# கலைக்கப்பட்ட இரு மாகாண சபைகளுக்குமான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் தினம் விரைவில்

## தேர்தல் திணைக்களம் தகவல்

கொழும்பு, டிசெ.10

நேற்றுமுன்தினம் நள்ளிரவு கலைக்கப்பட்ட மத்திய, வடமேல் மாகாண சபைகளுக்கான வேட்பு மனுக் கோரல் 7 நாள்களுக்குள் அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இரு மாகாணசபைகளுக்கும் 106 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இரு மாகாணங்களில் இருந்தும் சுமார் 34 லட்சத்து 58 ஆயிரத்து 182 பேர் வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

வடமேல் மாகாண சபைக்காக புத்தளம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மத்திய மாகாணத்தில் கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் வடமேல் மாகாண சபைக்கு 22 லட்சத்து 61 ஆயிரத்து 733 வாக்காளர்களும் மத்திய மாகாணத்தில் 17 லட்சத்து 96 ஆயிரத்து 449 வாக்காளர்களும் தகுதி பெற்றுள்ளனர்.

வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்திற்கு 16 உறுப்பினர்களும் குருநாகல் மாவட்டத்திற்கு 34 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவர்.

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்திற்கு 30 உறுப்பினர்களும் மாத்தளை மாவட்டத்திற்கு 10 பேரும் நுவரெலியா மாவட்டத்திற்கு 16 பேரும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இத்தேர்தல் 2007 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியலுக்கு அமையவே நடைபெறும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

# போர்க்கள முனைகளிலுள்ள புலிகளை சரணடையக் கோருகின்றது இராணுவம்

கொழும்பு, டிச. 10

போர்க் களமுனைகளில் எஞ்சியிருக்கும் விடுதலைப் புலி உறுப்பினர்களை படையினர் தங்களிடம் சரணடையும்படி வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

படையினரிடம் சரணடையும் புலி உறுப்பினர்களுக்குத் தேவையானவற்றை வழங்குவதற்கும் படையினர் தயாராகவுள்ளனராம்.

- இவ்வாறு இராணுவத் தலைமையகம் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

புலிகள் அமைப்பில் உள்ளவர்கள் தங்களது ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டு, தங்களுக்கு அருகாமையில் இருக்கும் இராணுவ முகாம்களில் சரணடைய வேண்டும் என இராணுவத்தினர் வேண்டிக் கொள்கின்றனர் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது என்றும்-

அந்த நாடுகள் ஐக்கிய நாடுகள் சபை, மற்றும் சர்வதேச தொழில் நிறுவனம் ஆகியவற்றின் பட்டயங்களைச் சரிவர நடைமுறைப்படுத்துகின்றனவா என்பது குறித்து விசாரணைகள் நடை பெறுகின்றன.

மேற்படி விசாரணைகள் முடியும் வரை இரு நாடுகளுக்கும் ஜி.எஸ்.பி+ வரிச்சலுகை கிடைக்கும். ஆயினும் விசாரணைகள் முடிவுற்றதும் அவற்றின் பெறு பேறுகள் பொறுத்து மேற்படி சலுகையை வழங்குவதனை நிறுத்த முடியும்; வாபஸ் பெற முடியும் - என்று நேற்று ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (அ)

### இந்திய அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் பழ. நெடுமாறன் ஆகிய இருவரையும் மற்றும் தமிழக அரசியல் தலைவர்களையும் அரசியல் கோமாளிகள் என்று வர்ணித்திருந்தார். இந்த அரசியல் கோமாளிகளின் பேச்சைக் கேட்டு, போர் நிறுத்தம் செய்யுமாறு இலங்கையை இந்தியா நிர்ப்பந்திக்காது என்றும்-

இவர்கள் விடுதலைப் புலிகளின் தயவில் கட்சி நடத்துபவர்கள். விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டால் விடுதலைப் புலிகளிடமிருந்து பெறும் வருமானம் குறைந்துவிடும். அதனால் அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசி வருகின்றனர் என்றும் அவர் கூறியிருந்தார்.

இராணுவ தளபதியின் இந்தக் கருத்துக்கு தமிழகத் தலைவர்கள் பலத்த கண்டனம் தெரிவித்தனர். இலங்கை அரசிடம் இந்தியா கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்திருந்தார். மேலும் சென்னையில் உள்ள இலங்கைத் துணை தூதரக அலுவலகம் எதிரே இன்று புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவித்தார்.

இந்த நிலையில், கொழும்பிலுள்ள இந்தியத் தூதர் அலோக் பிரசாத் இலங்கை இராணுவச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் தொடர்புகொண்டு பேசினார். அப்போது இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கருத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

இதையடுத்து, இராணுவத் தளபதியின் பேச்சுக்கு வருத்தம் தெரிவித்த கோத்தபாய ராஜபக்ஷ, இனி இதுபோன்ற கருத்துகள் கூறப்படுவது தவிர்க்கப்படும் என்று உறுதியளித்தார் - என்றார். (அ-சி)

### ஐ.நா. உலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது நெடுங்கேணிக்கு நகர்த்தப்பட்டுள்ளது.

தற்போதைய தொடரணியில், அரிசி, கோதுமை மா மற்றும் யுனிசெவ் நிறுவனம் வன்னியிலுள்ள பாடசாலைகளுக்காக அனுப்பிய பொருள்கள் போன்றவை கொண்டு செல்லப்படுகின்றன என அவர் கூறினார்.

### பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பின்னணியில் ''சண்டே ஒப்சேவர்'' பத்திரிகையின் ஆசிரியர் டினேஸ் வீரவன்ச நேற்றுப் பதவி நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக ஜெயதிலக்க டி சில்வா பத்திரிகையின் ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று அறியவந்தது. ஜெயதிலக்க டி சில்வா முன்னரும் இப்பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.

எனினும் பத்திரிகையின் ஆசிரியர் பதவி நீக்கப்பட்டதற்கும் சரத் பொன்சேகாவின் பேட்டி பிரசுரிக்கப்பட்டமைக்கும் தொடர்பு உண்டா என்று அரச உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது அவர் அதனை உறுதி செய்ய மறுத்து விட்டதாக பி.ரி.ஐ தெரிவித்தது. (அ)

### கோத்தபாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினரில் ஆயிரம் பேரின் மத்தியில் அவர் உரையாற்றினார்.

உலகத்திலேயே மிக மோசமான பயங்கரவாத அமைப்பான விடுதலைப்பு புலிகளுக்கு எதிராக போரிட்டு வெற்றிகளை ஈட்டிவரும் படையினர் எனத் தெரிவித்து அவர்களுக்கு பாராட்டுக்களை கோத்தபாய தெரிவித்தார் என்று பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பு குறிப்பிட்டுள்ளது.

படையினரின் சேமநலங்களை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தின் களமுனைகளின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக பிரிவுத் தளபதிகளும், படையணிகளின் தளபதிகளும் கோத்தபாயவுக்கு விளக்கிக் கூறினர். (அ-1)

### முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரமாரியான ஷெல் தாக்குதலை படையினர் நடத்தியுள்ளனர்.

முள்ளியவளை பகுதிக்குட்பட்ட மாமூலை, கணுக்கேணி, குமாரபுரம் பூதன் வயல் ஆகிய மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து நேற்று படையினர் ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இதில் மக்களின் பயன்தரு மரங்கள் மற்றும் வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் கால்நடைகள் பல இறந்துள்ளன - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
NOTHING IS IMPOSSIBLE MODEL EXAM - 2
தொடர் மாதிரிப் பரீட்சை - 2
ஆரம்பம் :-12.12.2008 (வெள்ளி)
உயிரியல் இணை.கணிதம்
BATCH - I 11.30-2.30 | BATCH - II 2.30-5.30
★ ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பரீட்சைகள் இடம் பெறவுள்ளன.
★ வெளி மாணவர்களும் பங்கு கொள்ளலாம்.
★ பரீட்சை யாழ்.நகர், வட்டுக்கோட்டை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் நடைபெறும்.
★ அனுமதிகளை முன்கூட்டியே அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.
★ பரீட்சைக்கான புள்ளித் திட்டம் பரீட்சை முடிவில் உடன் வழங்கப்படும்.

ICT புதிய வகுப்புகள் ஆரம்பம் R.KUMARAN
Tamil/ English Medium Classes தனித்தனியே
Grade 10 - Fundamentals
Grade 11- Visual Basic(VB6)
முற்றுமுழுதான செய்முறை பாடக்குறிப்புகள், பரீட்சைகள்
ஆரம்பத்தில் இணையத்தனூடாக முழு அறிவினைப் பெறுங்கள்.
BY: R.KUMARAN (B.Sc.)
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு தொ.பே.: 060 221 6083

SHAMROCK
ஈச்சமோட்டை வீதி, யாழ்.
A/L 2009-Physics
★ "ELECTRICITY"
ஆரம்பம்:- 11.12 - வியாழன், செவ்வாய் 3.30p.m.
★ Paper- Mon,Wed,Fri 6.15a.m.
Mr.K.கஜன்
★ அரசியல் - Mr.T.கஜன்
★ இந்துநாகரிகம் Mr.S.கார்த்திக்
★ அளவையியல் -Mr.R.ரமணன்
★ புவியியல் - Mr.A.RAJAH

புதிய கல்வியாண்டு 2009
தரம் 1 முதல் O/L வரை
அனுமதிகள் டிசெம்பர் 19 வரை
பிரிவு II
மதுரம் இஸ்ரிரியூட்,
டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org